# தெய்வீக அநுபவத்தின் வெளிப்படுத்தல்

## சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களின் சாட்சி

JESUS IS TRUE CHRIST THE GOD

PUBLICATIONS

MALAVILAI


எழுதியவர்

சாது C. செல்வ ராஜ் (அப்பா) MSc.

மலவிளை


இந்த புத்தகம் ONE GOD!! ONE PEOPLE!! A Document Revealing GOD's Secrets என்னும் ஆங்கில புத்தகத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு தொகுப்பாகும்.

# தெய்வீக அநுபவத்தின் வெளிப்படுதல்:

**சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களின் சாட்சி**

**Copyright ©**

**ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை**
தலைமை இடம் : மலவிளை

**ADHI PENTHEC0STHE SATHYA SABHAI**
**Headquarters : Malavilai**

**BEGINNING PENTECOSTAL TRUTH CHURCH**
**Headquarters : Malavilai**

**Author** : **SADHU. C. SELVA RAJ** (Appa) **MSc.**

**Contact Address :**

**Sadhu. C. Thomas M. Kurian** (Appa)
Trustee and Administrator
Beginning Pentecostal Truth Church
Malavilai Jeba Veedu
Adhi Penthecosthe Sathya Sabhai Malavilai Salai
Cheruppalur P.O., PIN 629 161
Kanniyakumari District, Tamil Nadu, India.

**Name and Address of the Publisher :**

**ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபை**
தலைமை இடம் : மலவிளை

**ADHI PENTHEC0STHE SATHYA SABHAI**
**Headquarters : Malavilai**

**BEGINNING PENTECOSTAL TRUTH CHURCH**
**Headquarters : Malavilai**

**Edition 2018**
**BPTCBN 0-00- 02**

**All Scripture quotations are from the Authorized TAMIL OV-BSI.**

Websites: www.onegodonepeople-sadhuselvaraj.org
www.bptchurch.org

e-mail : spiritual@bptchurch.org

# கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

# தெய்வீக அநுபவத்தின் வெளிப்பாடு

## 1. சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள்

இந்திய ஆங்கிலத்தில் **'சாது'** என்ற வார்த்தை, ஒரு பரிசுத்தவான் அல்லது சந்நியாச போதகர் அல்லது முற்றும் துறந்த துறவியைக் குறிக்கும். 'சாது' என்பதற்கு உலகத்தையும், உலக இன்பங்களையும் முற்றிலும் விட்டு, வெறுத்து வாழ்பவர் என்று பொருள். தமிழில் **'தேவநேசன்'** என்பதற்கு 'தேவனால் நேசிக்கப்பட்டவர்' அல்லது 'தியோப்பிலு' (லூக்கா 1 : 3) என்றும், **'ஐயா'** என்றால் 'தகப்பன்' அல்லது 'கனம் பொருந்தினவர்' என்றும் பொருள்படும் மிகுந்த மரியாதையும், மகா கனமும் நிறைந்த வார்த்தையாகும். பெரும்பாலான ஜனங்கள் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களை அன்போடு, 'ஐயா' என்று அழைத்தார்கள். ஜனங்கள் அவர்களை மிகுந்த அன்போடு, 'ஐயா' 'அப்பா' மற்றும் 'சாது ஐயா' என்றும் அழைத்தனர். 'அப்பா என்பது அரமேயு உள்நாட்டு வார்த்தையில், ஒரு குடும்பத்தின் தகப்பன், மிகவும் அன்பு நிறைந்த நெருக்கத்தோடு 'அப்பா' என்று அழைக்கப்பட்டார். இயேசுகிறிஸ்துவின் காலத்தில் பேசப்பட்ட எபிரெய மொழியின் ஒரு வடிவம் அரமேயு எனப்படும். இந்தியாவில் முக்கியமாகத் தமிழ் நாட்டில் 'அப்பா' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இந்தியா முழுவதிலும் இந்த வார்த்தை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் எங்களுடைய மிகவும் நேசிக்கப்பட்ட **ஆவிக்குரிய தகப்பன்** ஆவார். அவர்கள் இயேசுகிறிஸ்துவால் கிறிஸ்துவின் ஸ்தானத்தில் உறுதிபடுத்தப்பட்டு, நியமிக்கப்பட்ட, எங்களால் மிகவும்

நேசிக்கப்பட்ட ஆவிக்குரிய தகப்பனாக வாழ்ந்தார்கள். இருபதாம் நூற்றாண்டின் முதன்மையான அப்போஸ்தலர் (மற்ற எல்லா அப்போஸ்தலர்களுக்கும் தலைவர்) இவர். பேதுரு அப்போஸ்தலர் பவுல் அப்போஸ்தலருக்குப் பின்பு 'ஐயா' அவர்கள் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாக இருந்தார்கள். பேதுரு, பவுல் ஆகியோர் முதல் நூற்றாண்டின் முதன்மையான அப்போஸ்தலர்கள். (மற்ற எல்லா அப்போஸ்தலர்களுக்கும் தலைவர்) பேதுரு யூதர்களுக்கு அல்லது இஸ்ரவேலருக்கு, அப்போஸ்தலராக கிறிஸ்துவால், கிறிஸ்துவின் ஸ்தானத்தில் உறுதிபடுத்தப்பட்டு நியமிக்கப்பட்டார். பவுல் புறஜாதியாருக்கு, கிறிஸ்துவால் கிறிஸ்துவின் ஸ்தானத்தில் அப்போஸ்தலராக உறுதிபடுத்தப்பட்டு நியமிக்கப்பட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

இந்தக் கடைசி காலத்திற்காக சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் மூலமாய் நம்முடைய தேவனாகிய, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது மகிமையான சபையை உலக மக்கள் யாவருடைய நன்மைக்காய், இந்தியாவில், தமிழ்நாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில், மலவிளை என்னும் இடத்தில் எழுப்பி ஸ்தாபித்துள்ளார். கன்னியாகுமரி தீபகற்ப இந்தியாவின் தென் கோடியில் உள்ள குமரிமுனையாகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, ஐயா அவர்கள் மூலமாக பெரிய அற்புதங்கள், அநேகருடைய நோய் வியாதிகளை குணமாக்குதல், அநேகரிடமிருந்து பேய், பிசாசுகளைத் துரத்துதல் போன்ற கிரியைகளைச் செய்து தம்முடைய மிகவும் பரிசுத்தமான நாமத்தை மகிமைப்படுத்தினார். அவர்கள் ஒரு அப்போஸ்தலர், ஒரு தீர்க்கத்தரிசி, ஒரு வழிகாட்டி, ஒரு வழிநடத்துபவர், ஒரு ஆவிக்குரிய தகப்பன், கிறிஸ்துவின் சுவிசேஷப் போதகர், தேவ ஆராதனைக்கான பாடல்கள் தொகுத்தவர் மற்றும் ஒரு பாடகர். தேவனுக்கே மகிமை!

## 1.1 சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களின் சாட்சி

**சாது. G. தேவநேசன் (ஐயா)** அவர்கள் இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள, கன்னியாகுமரி மாவட்டத்தில் மலவிளை என்ற இடத்தில் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்து, இந்து பெற்றோர்களால் மிகவும் அன்பாக வளர்க்கப்பட்டார்கள். அவர்களுடைய தகப்பனார் அந்த இடத்திலுள்ள ஒரு இந்து பூசாரி. அவர்களுடைய குடும்பத்தினர் இந்து தெய்வங்களை வணங்கி வந்தனர். ஐயா அவர்கள் இந்து மதத்தில் அல்லது இந்துத்துவத்தில் தீவிரமானவராக இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு மூத்த சகோதரி இருந்தார். அந்தச் சகோதரி ஐயா அவர்களை மிகவும் நேசித்தார். அவர்களும் தன் சகோதரியை மிகவும் நேசித்தார்கள். பின்பு அந்தச் சகோதரி திருமணம் செய்து கொடுக்கப்பட்டார். ஆனால் தன் சகோதரியைக் காணாமல் அவர்களால் வீட்டில் இருக்க முடியவில்லை. எனவே ஒருநாள் தன் வீட்டிலும், அடுத்த நாள் தன் சகோதரியின் வீட்டிலுமாகத் தங்கினார்கள். தன் சகோதரியின் வீட்டிலிருந்து வரும்போது கண்ணீரோடு வருவார்கள். மேலும் ஐயா அவர்களைக் காணாமல் அவர்களுடைய பெற்றோரால் அவர்களது வீட்டில் தங்க முடியவில்லை. எனவே ஐயா அவர்கள் ஒரு நாள் விட்டு ஒருநாள் தன் வீட்டிற்கு வந்தார்கள். திடீரென்று, அவர்களுடைய மூத்த சகோதரி மரித்துப் போனார். தன் சகோதரியின் மறைவினால் ஏற்பட்ட தவிப்பு, ஐயா அவர்களுக்கு நோயை உண்டாக்கி விடுமோ என்று பெற்றோர் பயந்தனர். எனவே அவர்களுடைய படிப்பை நிறுத்தி விட்டனர். அவர்கள் படிக்க மிகவும் ஆசைப்பட்டார்கள். ஆனால் பெற்றோர் அவர்களை பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. எனவே அவர்களது படிப்பை நிறுத்தி விட்டார்கள். மூன்றாம் வகுப்பு வரை படித்திருந்தார்கள். பெற்றோர் தன்னைப் படிக்க அனுமதியாததால், ஐயா அவர்கள் வீட்டு வேலைகளைச் செய்யவும் மறுத்து விட்டார்கள். ஆனால் தன்னுடைய உடலை ஆரோக்கியமான நிலையில் வைத்துக்

கொள்வதில் மிகவும் கவனமுடையவர்களாயிருந்தார்கள். "ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான மனம் உடையவராக இருந்தார்கள்."

ஐயா அவர்கள் பல இந்து ஞானங்களைப் படித்து, பல இந்து தெய்வங்களை வணங்கி தெய்வீக வாழ்வு வாழ, மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள். ஆனால் ஒரு தெய்வீக வாழ்வு வாழ அவர்களால் இயலவில்லை. அவர்களுக்கு மன சமாதானம் இல்லை. தெய்வீக வாழ்வு வாழ, இனி கிழிந்த ஆடையுடனும், துணிப் பையுடனும் அலைந்து திரிய வேண்டுமென்று எண்ணினார்கள். ஆனால் ஜனங்கள் தன்னை ஒரு மனநோயாளி என்று எண்ணுவார்களே என்று நினைத்து அப்படி செய்யவில்லை. பின்பு வேறு பல வழிகளில் தெய்வீக வாழ்வு பெற முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்களால் தெய்வீக வாழ்வைப் பெற்றுக் கொள்ள இயலவில்லை. சமாதானக் கேட்டின் விளைவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. மன துயரமும், உதவியற்ற நிலைமையும் அதிகரித்துக் கொண்டே இருந்தன. பின்பு அவர்கள் தன்னுடைய வாழ்வை தான் வணங்கிய இந்து தெய்வங்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தார்கள். அந்தத் தெய்வங்களின் வாழ்வில் அவர்கள் எந்த ஒரு சிறப்புத் தன்மையையும் காணவில்லை. ஆனாலும் அவர்கள் தொடர்ந்து இந்து தெய்வங்களை வணங்கியும், இந்து தத்துவ ஞானங்களைப் படித்துக் கொண்டும் இருந்தார்கள். சமாதானக்கேடு மேலும் மேலும் அதிகரித்து அவர்களது நிலைமையை மோசமாக்கியது. சகலத்தையும் சிருஷ்டித்த ஒரு மெய்த் தேவன் உண்டு என்று உறுதியாய் நம்பினார்கள். அவர்களுடைய மனதில் சர்வத்தையும் சிருஷ்டித்த அந்த தேவன் யார்? என்ற ஒரு கேள்வி எழுந்தது. அந்த தேவனை அவர்கள் காண விரும்பினார்கள். அந்த நேரத்தில் அவர்கள் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் தேர்ச்சி பெற்ற அரசு ஊழியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். ஒரு ஆரம்ப துவக்கப்பள்ளித் தலைமையாசிரியர் மாதச்

சம்பளம் ரூபாய் 7 வாங்கிய போது ஐயா அவர்கள் மாதச் சம்பளம் ரூபாய் 37 வாங்கினார்கள்.

இந்தச் சமயத்தில் அவர்கள் 41 நாட்களுக்குள் மெய்த் தேவனைக் காண வேண்டும் இல்லாவிட்டால் தற்கொலை செய்து மரிக்க வேண்டுமென்று ஒரு உறுதியான முடிவு செய்தார்கள். எனவே அவர்களுடைய வியாகுலம் நாளுக்கு நாள் அதிகரித்தது. ஆனால் நாற்பதாவது நாள் வரையிலும் அவர்கள் தேவனைக் காண முடியவில்லை. அவர்களுடைய வியாகுலம் நாளுக்கு நாள் அதிகமதிகமாய்ப் பெருகியது. "என்னுடைய தேவன் என்னைக் கைவிட்டாரே நான் என்னுடைய தேவனைக் காண இயலவில்லையே" என்று மிகுந்த சஞ்சலத்தோடு காணப்பட்டார்கள்.

41 வது நாளில், காலையில் அவர்கள் "இந்த நாளில் தானே என் வாழ்வு முடியும், எனக்குத் தேவையானவைகள் என்ன?" என்று சிந்தித்தார்கள். ஒரு புதிய உடை அணிய வேண்டுமென்றும், தின்பண்டம் சாப்பிட வேண்டுமென்றும் ஆசைப்பட்டார்கள். ஆகவே கடையிலிருந்து ஒரு புதிய ஆடை வாங்கி, அந்தக் கடையிலிருந்த தையற்காரரிடம் அதைத் தைத்து, அதைத் தானே துவைத்து அணிந்து கொண்டார்கள். பின்பு ஒரு தேநீர் கடைக்குச் சென்று தின்பண்டம் சாப்பிடவும், காப்பி குடிக்கவும் முயற்சித்தார்கள். ஆனால் அவர்களால் முடியவில்லை. அந்த நேரத்தில் அவர்களுடன் பணிபுரியும் அலுவலக உதவியாளர் ஐயா அவர்களிடம் வந்து "என்ன?" என்று கேட்டார். ஐயா அவர்களுடைய முகபாவனையைக் கண்டு ஏதோ அசம்பாவிதம் அவர்களுக்கு நேரிடப் போகிறது என்று அறிந்து கொண்டார். "இன்றைக்கு தாங்கள் தங்களுடைய வீட்டுக்குச் செல்ல வேண்டாம், என்னுடைய வீட்டுக்கு வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். ஆனால் ஐயா அவர்கள் பிடிவாதமாக அவருடன் செல்ல மறுத்து விட்டார்கள். பின்பு

அவர்கள் தன்னுடைய வீட்டிற்குத் திரும்பிச் சென்றார்கள். தனது வீட்டிற்குச் செல்லும் வழியில் "எந்த காரணமுமின்றி நான் சாகப் போகிறேன் என்னைச் சிருஷ்டித்த தேவன் இருக்கிறார். அவரும் என்னைக் கைவிட்டு விட்டார்" என்று வேதனைப்பட்டு அழுதார்கள். ஆனாலும் அவர்களுடைய மனதிலிருந்த கடினம் மாறவில்லை. அது இரவு வேளையாயிருந்தது. பகலிலேயே தூக்குபோட்டுத் தற்கொலை செய்து கொள்வதற்காக ஒரு பலா மரத்தைத் தெரிந்து வைத்திருந்தார்கள்.

பின்பு அந்த இரவில்தானே அவர்கள் அந்த மரத்தின் மீது ஏறி கயிற்றைப் போட்டுத் தொங்கி மரிப்பதற்காகத் தன் சரீரத்தை அசைத்தார்கள். உடனே மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்களைச் சந்தித்தார். ஆனால் அது தேவ சந்திப்பு என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே இன்னும் ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்குள் தேவனைக் காண வேண்டுமென்று எண்ணினார்கள். அதற்குள் தேவனைக் காண முடியாவிட்டால் மரிக்க வேண்டுமென்று நினைத்தார்கள். பின்பு மரத்திலிருந்து கயிற்றை அவிழ்த்து எடுத்துக் கொண்டு இறங்கினார்கள்.

**ஐயா அவர்கள் மரத்திலிருந்து இறங்கிக் கீழே வந்த போது வானம் திறந்திருப்பதைக் கண்டார்கள். வானத்திலிருந்து ஒரு பெரிய நதியின் நீர் சிறிதளவும் வெளியே செல்லாமல், முழுவதுமாக அவருக்குள் பாய்வதை அனுபவித்தார்கள். அந்த வேளையில் கிறிஸ்து தான் மெய்த்தேவன் என்று நினைத்தார்கள். அதற்கு முன்பு அவர்கள் கிறிஸ்தவ மதத்தை மிகவும் வெறுத்தார்கள். வானத்திலிருந்து அந்தப் பெரிய நதி தொடர்ந்து அவருக்குள் மிகவும் அதிகமதிகமாய் பாய்ந்து கொண்டே இருந்தது. பின்பு அவர்கள் இயேசுகிறிஸ்து தன்னை எல்லாப் பேய் பிசாசுகளையும் எதிர்த்துப் போரிடத்தக்க**

**போர் வீரனாக மாற்றிக் கொண்டிருக்கிறார் என்று உணர்ந்தார்கள். எல்லாப் பேய் பிசாசுகளும் ஒரு சுண்டுவிரலுக்குத்தான் சமம் என்று எண்ணத்தக்க தைரியம் அவர்களுக்கு ஏற்பட்டது. உடனே நதியின் பாய்ச்சல் நின்று விட்டது.**

பின்பு அவர்கள் பேய்களையும் பிசாசுகளையும் எதிர்த்துப் போரிட வேண்டும் என்ற முடிவோடு தன்னுடைய வீட்டிற்குச் சென்றார்கள். தன்னுடைய வீட்டிற்குச் சென்று "**பேய்களுக்கும் பிசாசுகளுக்கும் எதுவும் கொடுக்காதீர்கள். நான் பேய்களையும் பிசாசுகளையும் எதிர்த்துப் போராடப் போகிறேன்**" என்று சத்தமிட்டு சொன்னார்கள். அதைக்கேட்டு அவர்களுடைய வீட்டாரும், அண்டை வீட்டாரும் மிகவும் குழப்பமடைந்தார்கள். அபின் கலந்த கள் குடித்திருப்பது தான் இதற்குக் காரணம் என்று நினைத்து குழப்பமடைந்தார்கள். பின்பு ஐயா அவர்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி, கோபமும், மூர்க்க தோற்றமுடைய காளி என்ற இந்து பெண் தெய்வத்தை வினவினார்கள். அதன் பின்பு அந்த ஜனங்கள் வணங்கிய அவர்களுடைய இந்து தெய்வங்கள் இருந்த தோப்பிற்குச் சென்றார்கள். இந்து தெய்வங்களைப் பெயர் சொல்லி அழைத்து அவைகளை எச்சரித்தார்கள். அவ்விடத்து மக்கள் அந்தத் தோப்பில் கூடினார்கள். அந்த ஜனங்களுக்கு அடுத்து என்ன செய்வது என்று முடிவு செய்ய முடியவில்லை. ஐயா அவர்கள் ஜெபம் பண்ணும்படி முழங்கால்படியிட்டார்கள்.

அந்த நேரத்தில் மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்கள் மூலமாக ஒரு தீர்க்கத்தரிசனம் பேசினார். தேவன் பேசிய தீர்க்கத்தரிசனமாவது, "**இன்று முதல் கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் இங்கே கிரியை செய்யப் போகிறார். எல்லாப் பேய்களையும் பிசாசுகளையும் அவர் அழித்து ஒழித்துப் போடுவார்.**" ஐயா அவர்கள் ஜனங்களிடம் தங்கள் பாவங்களை விட்டு விடவும் சத்துருக்களை சிநேகிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள். "**இயேசு தான்**

**மெய்த்தேவன்"** என்று அவர்களிடம் உறுதியாகவும், தெளிவாகவும் கூறினார்கள். அப்போது அந்த ஜனங்கள் ஐயா அவர்களை மனநலமற்றவர் என்று கூறினார்கள்.

மறுநாள் முதல் அவர்கள் தொடர்ந்து ஜனங்களிடம், **"எந்தப் பாவமும் செய்யாதீர்கள். ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் அவனுக்குக் காட்டு. இயேசுகிறிஸ்துவே மெய்யான தேவன், அனைவரும் அவரை மட்டுமே ஆராதிக்க வேண்டும்,"** என்று கூறினார்கள். அவர்களுடைய வீட்டார் அவர்களை மனநலமற்றவர் என்று உறுதியாய் எண்ணினார்கள். எனவே, ஐயா அவர்களின் உடல் நலத்துக்காக இரட்டைக் கடா வெட்டி தங்களுடைய இந்து தெய்வங்களுக்கு பலியிடுவதாக வாக்குக் கொடுத்தனர். பின்பு ஒரு வைத்தியரை அழைத்து வந்தனர். வைத்தியர் ஜனங்களிடம் அறிவொளியினால் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறினார். மற்ற மனநோய்களைக் குணமாக்க இயலும். இதைக் குணமாக்க முடியாது என்றார். அந்த வைத்தியரின் அறிவுரைப்படி மருத்துவ மூலிகைகளிலிருந்து தயாரித்த ஒரு தைலத்தை ஐயா அவர்களின் சிரசில் அடுக்கு அடுக்காகப் பூசினர். அதை ஐயா அவர்கள் எதிர்த்தார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து செய்தார்கள். அவர்களை எதிர்த்தால் தனக்குக் கைவிலங்கும், சங்கிலியும் போடுவார்கள் என்று நினைத்து அமைதலாக உட்கார்ந்து இருந்தார்கள். பின்பு அவர்கள் ஐயா அவர்களைக் குளிப்பதற்காக அழைத்துச் சென்றனர். குடம் குடமாகத் தண்ணீரைத் தலையில் ஊற்றினார்கள். ஐயா அவர்களுக்கு மூச்சுத் திணறல் உண்டானது. தலையில் தொடர்ந்து தண்ணீர் ஊற்றி ஐயா அவர்களை மிகவும் உபத்திரவப்படுத்தினார்கள். எவ்வளவு பயங்கரமான, கொடூரமான, அச்சமூட்டும் ஜனங்கள் அவர்கள்!

பின்பு அந்த ஜனங்கள் காஞ்சிரக்கோட்டிலுள்ள கிருபாசனம் என்ற பெந்தெகொஸ்தே சபையைப் பற்றி கேள்விப்பட்டு, ஐயா அவர்களை அந்தச்

சபைக்குக் கொண்டு சென்றனர். அங்கு சென்றதும் ஐயா அவர்களுக்குத் தான் கர்த்தருக்கு எதிராகச் செய்த தன்னுடைய பாவங்களைக் குறித்ததான விழிப்பும், உணர்வும் ஏற்பட்டது. **"நான் தேவனுக்கு விரோதமாக இந்தப் பாவங்களையெல்லாம் இப்படிச் செய்திருக்கிறேனா?"** என்று எண்ணினார்கள். தன்னுடைய பாவங்களைக் குறித்த விழிப்பும் உணர்வும் அதிகமதிகமாக ஏற்பட்டது. **"தேவன் ஏன் இந்தத் துரோகியை உலகில் விட்டு வைத்தார்? ஒரு நிமிடமாகிலும் நான் இந்த உலகில் வாழ்வதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா?"** என்று மறுபடியும் சிந்தித்தார்கள். மறுபடியும், மறுபடியுமாக அவர்கள் தேவனுடைய அன்பை நினைத்து அழுதார்கள். **"இந்தத் துரோகிக்கு, இந்தப் பாவங்களெல்லாம் மன்னிக்கப்படுமா? எப்படி நான் பாவ மன்னிப்பைப் பெற முடியும்?"** என்று எண்ணினார்கள். தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படுமா? என்று நினைத்த மாத்திரத்தில் அதிகமாய்ப் பயந்து நடுங்கினார்கள்.

## 1.2 அகோரமான ஒரு தரிசனம்

அந்த நேரத்தில் திடீரென்று வானம் இரண்டாகப் பிளர்ந்தது. உடனே கிறிஸ்து சிலுவையில் மூன்றாணியில் தொங்கும் அகோரமான காட்சியை ஐயா அவர்கள் கண்டார்கள். அத்தகைய பயங்கரமான காட்சியைக் கண்டு ஒருவரும் இந்த உலகில் உயிர் வாழ முடியாது. எவ்வளவு சகிக்கக் கூடாத காட்சி! அவருடைய பரிசுத்தமான வலது கண் அதிகமான பசி, தாகம், களைப்பு, வேதனை, தூக்கமின்மை மற்றும் தமது பரிசுத்த சரீரத்தில் பட்ட மிக பலத்த அடிகள் காரணமாகக் குழிவிழுந்து காணப்பட்ட நிலையிலும்; அவரது பரிசுத்தமான இடது கன்னத்தில் மூங்கில் தடியாலும், கைகளினாலும் பட்ட பலத்த அடிகளினால் அவரது பரிசுத்தமான இடது கண் கண்குழியை விட்டு வெளியே காணப்பட்ட நிலையிலும்; தாடி ரோமம்

பிடுங்கப்பட்ட அவரது மிகவும் ஒட்டிய குழிவிழுந்த பரிசுத்தமான கன்னங்களுடனும்; மகா கொடிய பசி, தாகம், களைப்பு, வேதனை மற்றும் தூக்கமின்மை காரணமாக மிகவும் ஒட்டிய, வெறுமையான, பரிசுத்தமான வயிறுடனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மிகவும் சகிக்கக் கூடாத நிலையில் சிலுவையில் மூன்றாணியில் தொங்கிக் கொண்டிருந்தார். அவருடைய மகா பரிசுத்த இரத்தம், அவருடைய மகா பரிசுத்தமான கைகளிலும், கால்களிலிருந்தும் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. அவருடைய மகா பரிசுத்தமான சரீரம் பயங்கரமாய் அடிக்கப்பட்டுக் கிழிக்கப் பட்டிருந்தது. அவருடைய மகா பரிசுத்த முகத்துடன் கூடிய, மகா பரிசுத்த சரீரம் குளித்தது போல, அவரது மகா பரிசுத்த சிரசு முதல் அவருடைய மகா பரிசுத்த பாதம் வரையிலும் அவருடைய மகா பரிசுத்த இரத்தத்தால் நிறைந்து காணப்பட்டது. தமது மகா பரிசுத்த இடையில் ஒரு கீற்று வஸ்திரம் மாத்திரம் அணிந்தவராயும், தமது மகா பரிசுத்த சிரசில் இரும்பாணிகளாலான கிரீடம் தரித்தவராயும், உருக்குலைந்த தோற்றத்துடனும், உருமாறிய முகத்துடனும் மூன்றாணிகளில் சிலுவையில் மகா அகோரமாய்த் தொங்கிக் கொண்டிருந்தார். அவருடைய மகா பரிசுத்தமுள்ள அழகான தோற்றம் உருக்குலைந்தும், அவரது மிகவும் அழகான முகம் உருமாறியும், மிகவும் அகோரமான தாங்கொணா துயரத்தோடும், கொடிய வேதனையோடும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூன்றாணிகளில் சிலுவையில் மகா அகோரமாய் துடிதுடித்து நடுங்கிக் கொண்டிருந்தார். இந்தக் காட்சியைக் கண்ட ஐயா அவர்கள் பயங்கரமாக ஏங்கி, உயிரற்றவர் போலானார்கள். அந்தச் சிலுவையை உற்று நோக்கிக் கொண்டிருந்து, தொடர்ந்து கண்ணீர் விட்டு அழுது கொண்டே இருந்தார்கள். அந்தச் சமயத்தில் ஐயா அவர்களுடைய உறவினர்கள் ஐயா அவர்களைப் பார்க்க வந்தனர். அவர்களுடைய தகப்பனாரிடம் ஐயா அவர்கள்

எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அதற்குத் தகப்பனார் "மிகவும் கூடுதலாக உள்ளது" என்று கூறினார்.

இப்படி ஐயா அவர்கள் அழுது கொண்டேயிருந்த போது மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, ஐயா அவர்களுடன் சிலுவையிலிருந்து கொண்டு பேசத் தொடங்கினார். தேவன்: **"என் மகனே! உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நான் உன்னுடைய தேவன், வேறொருவரும் இல்லை. ஏனெனில் நான் உனக்காகவும், உன் பாவங்களுக்காகவும் அடிக்கப்பட்டேன்; நொறுக்கப்பட்டேன்"** என்று பேசினார். தேவனுடைய இந்த வார்த்தைகள் ஐயா அவர்களுடைய வாயினுள் வந்ததும் ஐயா அவர்கள் மீண்டும் உயிர் பெற்றார்கள். பின்பு அந்தக் காட்சியும் மறைந்து விட்டது. எவ்வளவு மகா அகோரமான காட்சி இது!

## 1.3 *ஐயா அவர்கள் இரட்சிக்கப்பட்டது*

ஐயா அவர்கள் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைக்கும்படியான மிகவும் இலகுவான அநுபவமாகிய ஆவிக்குரிய அனுபவத்தை உடனே அடைந்தார்கள். அதன் பின்பு பிறரிடம் பேச ஆரம்பித்தார்கள். தன்னுடைய பாவமும் துரோகமும் நிறைந்த வாழ்க்கையை நினைத்து மீண்டும் மீண்டும் கண்ணீர் விட்டு அழுதார்கள். ஆனால் இருதயத்தில் அதிகமான சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும், ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதுமாகத் தேவனுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் அடைந்தார்கள். பின்பு தன்னுடைய வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள். தேவனால் அவர்களுடைய சரீரத்திலிருந்த நோய்களெல்லாம் அதிசயமான பிரகாரமாய்க் குணமாக்கப்பட்டன. **ஐயா அவர்கள் 26.01.1948 அன்று இரட்சிக்கப்பட்டார்கள்.** தேவனுக்கே மகிமை!

## 1.4 ஐயா அவர்களின் இரட்சிப்புக்குப் பின்

ஐயா அவர்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்ட பின்பு அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஐயா அவர்களிடம் பாதி அளவே அன்பு காணப்பட்டது. இத்தகைய மகிமையான ஆவிக்குரிய அனுபவங்களை அடைவதற்கு முன்பு அவர்கள் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர் ஒருவரைத் திருமணம் செய்து, ஒரு ஆண் குழந்தையும் இருந்தது. அதற்குப் பின்பு அவர்களுடைய மனைவியும் இரட்சிக்கப்பட்டு, பேதுரு அப்போஸ்தலரின் மனைவி பேதுரு (கேபா) (*I கொரி 9 : 5*) அப்போஸ்தலரோடு ஒரு சகோதரியாக தேவ ஊழியம் செய்தது போல, ஐயா அவர்களோடு கூட தேவ ஊழியம் செய்தார். ஆனால் சில வருடங்களுக்குள்ளாக கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார்.

ஐயா அவர்கள் இரட்சிக்கப்பட்டவுடன் மற்றவர்களைப் போலவோ, மற்ற தேவ ஊழியக்காரர்களைப் போலவோ வாழாமல் தேவனுக்குப் பிரியமான, மகிமையான பிள்ளையாக மரணபரியந்தம் வாழ வேண்டுமென்று விரும்பினார்கள். மேலும் தேவனுடைய ஒரு மகிமையான சாட்சியாகவும் வாழ வேண்டுமென்றும் விரும்பினார்கள்.

"*உம்முடைய சாட்சிகளை நித்திய சுதந்தரமாக்கிக் கொண்டிருக்கிறேன், அவைகளே என் இருதயத்தின் மகிழ்ச்சி.*" *சங்கீதம் 119 : 111*

ஐயா அவர்கள் தன்னுடைய பாவங்களைச் சொல்லி, தனது சாட்சியை அறிவிக்க ஆரம்பித்தார்கள். பின்பு உலகம் முழுவதற்கும் தன்னுடைய சாட்சியை அறிவிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். உலகம் முழுவதற்கும் தன்னுடைய சாட்சியை அறிவிக்கக் குறைந்தது 10 அல்லது 15 ஆண்டுகள் ஆகும் என்றும் சொல்லி முடித்தவுடன் மீண்டும் துவக்கிய இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டுமென்றும் நினைத்தார்கள்.

## 1.5 கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும்படி கர்த்தர் ஐயா அவர்களுக்குக் கட்டளையிட்டது

ஐயா அவர்கள் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது வானத்திலிருந்து ஒரு அசரீரி கேட்டது. அந்தச் சத்தம் "**மகனே, என்னுடைய ஊழியத்தைச் செய்**" என்பதே. பின்பு அவர்கள் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: "**தேவனே, எனக்கு எப்படி ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்று தெரியாதே**" என்றார்கள். உடனே நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்களிடம், "**மகனே, என் சித்தம் செய்; எனக்குக் கீழ்ப்படி**" என்றார். அவர்கள் அதற்குப் பிரதியுத்தரமாக "**தேவனே, நான் உம் சித்தம் செய்வேன்; உமக்குக் கீழ்ப்படிவேன்**" என்றார்கள். இவ்விதமாக ஐயா அவர்கள் தன்னை முழுமையாகத் தேவனிடத்தில் ஒப்படைத்துச் சரணடைந்தார்கள். இப்பொழுது நாம் தேவ ஊழியருக்குத் தேவையான தகுதிகள் எவைகள் என்பதை நன்கு புரிந்து கொள்ள முடிகிறது. 1. முழுமையான கீழ்ப்படிதல் 2. கர்த்தருடைய சித்தம் செய்ய நல்ல வாஞ்சை 3. கர்த்தருக்காகப் பாடுபட நல்ல வாஞ்சை 4. சுத்தமான இருதயத்திலிருந்தும், நல்மனச்சாட்சியிலிருந்தும், மெய்யான விசுவாசத்திலிருந்தும் வரும் தெய்வீக அன்பு 5. முழுமையான அர்ப்பணிப்பு 6. முழுமையான ஒப்புக் கொடுத்தல் 7. தெளிவான தீர்மானம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

## 1.6 கர்த்தருடைய ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது

**சில நாட்களுக்குப் பின்பு திடீரென்று கர்த்தர் ஐயா அவர்களை அவர்களது வீட்டிலேயே தேவனுடைய ஊழியத்தை ஆரம்பிக்கும்படிச் சொன்னார்.** எதிர்பாராத வேளையில் கிருபாசனம் சபையைச் சேர்ந்த இரண்டு ஊழியக்காரர்கள் வந்தார்கள். தற்போதுள்ள மலவிளைக்கு எதிரில் பரளியாற்றின் மறுகரையில் அமைந்துள்ள

அவர்களுடைய வீட்டில் தேவனுடைய ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. வாரத்திற்கு ஒரு ஆராதனை நடத்தப்பட்டது. நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, அற்புதங்கள், அடையாளங்கள், பலவிதமான வல்லமையான செயல்கள் மற்றும் பலத்த கிரியைகள் செய்ய ஆரம்பித்தார். பேய்கள், பிசாசுகள் மற்றும் அசுத்த ஆவிகள் பலத்த சத்தமிட்டு "**நாங்கள் வெளியேறுகிறோம்; இயேசுகிறிஸ்துவே மெய்யான தேவன். இவர் உம்முடைய ஊழியக்காரர். நாங்கள் உம்முடைய ஊழியக்காரருக்குக் கீழ்ப்படிவோம்**" என்று கூறின. இப்படியாக பேய்கள், பிசாசுகள் மற்றும் அசுத்த ஆவிகள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியிட்டு வெளியேறின.

**பின்பு கர்த்தர் ஐயா அவர்களிடம் ஒரு ஓலை கொட்டகை அமைத்து தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்படியாகக் கூறினார்.** அதன்படி ஒரு கொட்டகை அமைத்து தேவனுடைய ஊழியத்தை ஆரம்பித்தார்கள். கிருபாசனத்திலிருந்து தேவ ஊழியக்காரர் எவரும் ஐயா அவர்களிடம் வரவில்லை. ஐயா அவர்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். கர்த்தர் ஐயா அவர்களுக்குப் போதிக்கும் படியாக விசேஷமான தூதுகளைக் கொடுத்தார். அந்த நேரத்தில் ஒரு மனிதர் அவர்களுக்கு உதவி செய்தார். பின்பு, கர்த்தருடைய கட்டளையின்படி, தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, தேவனுடைய ஊழியத்தைச் செய்ய உபவாசங்களை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள்.

## 1.7 இயேசுகிறிஸ்துவின் மிக மகிமையான தரிசனம்

இரண்டாவது நாளில் ஐயா அவர்கள் முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணிக் கொண்டிருந்த போது, **தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகா பெரிய உருவத்தில், மிகுந்த அழகுடனும், மிகுந்த சிறப்புடனும் அவர்களிடம் வந்தார்.**

**அவருடைய மகா தேஜசும், மகா கெம்பீரமும், மகா பிரகாசமும் மற்றும் மின்னும் ஜொலிப்பும் விவரிக்க முடியாதவைகள். தேவன் மகா மகிமையாய் ஜொலித்துக் கொண்டிருந்தார்.** அவரைக் கண்டதும் ஐயா அவர்களுக்கு ஜெபிக்க வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. எனவே அவர்கள், **"ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்......"** என்று சொன்னார்கள். மிகவும் பயந்து வெளியில் ஓடி விடுவோமா என்று நினைத்தார்கள். ஆனால் கட்டப்பட்டவரைப் போலக் கட்டுப்பட்டு அங்கே அப்படியே உட்கார்ந்து விட்டார்கள். **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, ஐயா அவர்களுடைய வலது பக்கத்தில் வந்து, அவருடைய வலது பக்கத்தில் சேர்ந்து கொண்டார். அப்போது ஐயா அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாகி விட்டதாக உணர்ந்தார்கள். அதுமுதல் கர்த்தர் ஐயா அவர்களை அவர்கள் செய்த எல்லாக் காரியங்களிலும் விசேஷமாக தம்முடைய தெய்வீகப் பாதையில் வழி நடத்தினார்.** தேவனுக்கே மகிமை!

## 1.8 *ஐயா அவர்கள் அரசு வேலையைத் தொடர்ந்து செய்தது*

ஐயா அவர்கள் இரட்சிக்கப்பட்ட நாள் முதல் தனது வழக்கமான உணவாகிய அரிசி சாப்பாட்டைச் சிறிதளவே உட்க்கொண்டார்கள். ஏனெனில் அவர்களால் அதிக உணவு சாப்பிட முடியவில்லை. அந்த நேரத்தில் அவர்கள் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் தேர்ச்சி பெற்ற அரசு அலுவலராகப் பணிபுரிந்து வந்தார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்ட பிறகு அவர்களுடைய வாயையும் வயிற்றையும் கூட கர்த்தர் இரட்சித்திருந்தார். பின்பு, காலையில் ஒரு குவளை கடுந்தேயிலை குடித்து விட்டுத் தன்னுடைய வேலைக்குச் சென்றார்கள். வேலையை முடிக்க மதியம் 1 மணி அல்லது 2 மணி வரை ஆகும். இரட்சிக்கப்பட்ட பிறகு தன்னுடைய வேலையை மிகவும் சரியாகச் செய்தார்கள். ஆகவே வேலை மிகவும் கடினமாக இருந்தது.

அந்தக் காலத்தில் ஒரு ஆரம்பத் துவக்கப்பள்ளித் தலைமை ஆசிரியரின் மாதச்சம்பளம் ரூபாய் 7/-. ஆனால் ஐயா அவர்கள் 37/- ரூபாய் மாதச் சம்பளம் பெற்றார்கள். இரட்சிக்கப்பட்ட பிறகு தன்னுடைய சம்பளம் முழுவதையும் தன் தாயார் கையில் கொடுத்து விட்டார்கள். தாயார் அவர்களிடம் 15/- ரூபாய் வைத்துக்கொள்ளும்படி கூறினார். ஆனால் தாயின் வற்புறுத்தலால் ரூபாய் 2/- மட்டுமே எடுத்துக் கொண்டார்கள்.

ஒவ்வொரு நாளும் பரிசுத்த வேதாகமத்தில் 30 முதல் 40 அதிகாரங்கள் வாசிப்பார்கள். ஒன்று அல்லது இரண்டு அதிகாரங்களை வாசித்தவுடன் சிறிது நேரம் ஜெபம்பண்ணுவார்கள். இந்த முறையிலேயே அவர்கள் பரிசுத்த வேதாகமத்தை முழுமையாகப் பலமுறை படித்தார்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் உபவாசம் இருந்தார்கள். சில சமயங்களில் கர்த்தருடைய வழிநடத்துதலின்படி 11 நாட்கள் உபவாசம் இருந்தார்கள். அந்த நேரத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எரேமியாவுக்குக் கொடுத்தது போன்று கீழ்க்கண்ட வாக்குத்தத்தத்தை ஐயா அவர்களுக்குக் கொடுத்தார்:

*"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்."* *எரேமியா 33 : 3*

பின்பு திடீரென்று ஐயா அவர்களுக்கு ஒரு ஆழ்ந்த தூக்கம் அல்லது ஆழ்ந்த நித்திரை பிடித்தது. சாலையில் நடந்து செல்லும் போதே தூங்கினார்கள். தன்னுடைய கால் ஒரு குழியில் அல்லது சாலை ஓரத்தில் விழுந்த போது தான் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டார்கள். கர்த்தர் அவர்களை எல்லாவித ஆபத்துகளிலிருந்தும் பத்திரமாய்ப் பாதுகாத்தார். ஒருநாள் ஐயா அவர்கள் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது, ஒரு மண் பானையும், ஒரு மண்

சட்டியும் வைத்திருந்த ஒரு குயவனின் மகனின் மீது மோதி விட்டார்கள். அவனுடைய கையில் ஒரு மண் சட்டியும், மண் பானையும் இருந்தன. அதில் அவனுடைய மண் சட்டி சாலையில் விழுந்து நொறுங்கியது. அந்தச் சிறுவன் அழுதான். உடனே ஐயா அவர்கள் மறுநாள் அதற்குரிய விலையைத் தந்து விடுவதாகக் கூறி அவனை சமாதானப்படுத்தினார்கள். அடுத்த நாள் குயவன் வீட்டார் அதன் விலையைப் பெற்றுக்கொள்ள மறுத்தார்கள். ஆனால் ஐயா அவர்கள் கட்டாயப்படுத்தி அதற்குரிய பணத்தைக் கொடுத்து விட்டார்கள். அவர்களுடைய இந்த ஆழ்ந்த தூக்கத்தினால் போதகம் பண்ணவும் முடியவில்லை. மிகுந்த மன வேதனையுடன் ஆராதனை நடத்துவதையும், போதகம் பண்ணுவதையும் தவிர்த்து விடலாம் என்று எண்ணினார்கள். மேலும் ஆராதனைக்கு வரும் ஜனங்கள் பாட்டுகளைப் பாடிவிட்டு, சென்று விடுவார்கள் என்றும் எண்ணினார்கள். பின்பு இது தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் தன்னிடம் கொடுக்கப்பட்டதான, மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட காரியம் என்று எண்ணினார்கள். பின்பு அவர்கள் ஆராதனைகளை நடத்தினார்கள். உபவாசங்கள் இருக்கத் தொடங்கினார்கள். சில நாட்களுக்குள் அந்த ஆழ்ந்த தூக்கம் அவர்களை விட்டு நீங்கியது, வரவில்லை. தேவனுக்கே மகிமை! உபவாசம் முடிந்தவுடன் மரவள்ளிக்கிழங்கு, பழங்கள் மற்றும் வேறு ஏதாவது சாப்பிடுவார்கள். அடிக்கடி உபவாசம் மேற்கொண்டபடியால் அவர்களுக்கு அரிசி உணவின் மீது வெறுப்பு ஏற்பட்டது.

## 1.9 வேலையை ராஜினாமா செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்டது

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்களை அரசு வேலையை ராஜினாமா செய்யும்படி கட்டளையிட்டார். ஆகவே அதை ராஜினாமா செய்தார்கள். இதினிமித்தம் அவர்களுடைய குடும்பத்தினர் ஐயா அவர்களை விரும்பாமல்

அதிகமாய் வெறுத்து அவர்களிடம் அன்பற்றவர்களானார்கள். ஆனால் ஐயா அவர்கள் இதை ஒரு பெரிய காரியமாகக் கருதவில்லை. மிளகாய், உப்பு மற்றும் தண்ணீரை உணவாக்கிக் கொண்டார்கள். இரட்சிக்கப்படுவதற்கு முன் அவர்கள், ஒருவேளை கூட உணவு இன்றி வாழ முடியாது என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் கர்த்தர் அவர்களை மிகவும் விஷேசமாக வழிநடத்தினார். தேவனுக்கே மகிமை!

## 1.10 மலவிளையில் தற்போது அமைந்துள்ள இடத்தில் கர்த்தருடைய ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது

ஐயா அவர்கள் பரளியாற்றிற்கு அடுத்த கரையில் உள்ளதும், முதலில் நடத்தி வந்த இடத்திற்கு எதிரிலும் உள்ள புதிய இடத்தில் தேவனுடைய ஊழியத்தை ஆரம்பிக்கத் தீர்மானம் பண்ணினார்கள், ஜனங்களும் அதை விரும்பினார்கள், அது தேவனுடைய சித்தமாகவும் இருந்தது. அதன் பின்பு சில இடங்களையும் பார்வையிட்டார்கள். தேவன் ஒரு கொட்டகை போடும்படியாக இப்போதுள்ள ஜெபவீடு அமைந்துள்ள இடத்தைக் காண்பித்தார். பின்பு கொட்டகை அமைப்பதற்கு 100 மூங்கில் கம்புகளை வெட்டினார்கள். அந்த 100 மூங்கில் கம்புகளில் ஒன்றை அந்த இடத்து மனிதன் ஒருவன் திருடிவிட்டான். ஆகவே தேவ கோபத்தினால் அவனுடைய வீடு குப்பை மேடானது. ஏற்கனவே தனக்கு உதவி வந்த மனிதனும் அவர்களை விட்டுச் சென்றுவிட்டான்.

புதிய கொட்டகை அமைக்கும் பணி முழுமையாக முடிந்தது. அந்தப் புதிய கொட்டகை கிருபாசனத்தின் தலைமைப் போதகரால் பிரதிஷ்டை பண்ணப்பட்டு, தேவ சித்தத்தின்படி இந்த இடத்தில் 1949 ஆம் ஆண்டு தேவனுடைய ஊழியம் தொடங்கப்பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

பின்பு, ஐயா அவர்களுக்கு உதவி வந்த வேறொரு மனிதனும் அவர்களை விட்டுச் சென்று விட்டான். உணவு இல்லாமல் மிகுந்த கஷ்டங்களை ஐயா அவர்கள் அநுபவித்தார்கள். அதனால் தொடர்ந்து மிளகாய், உப்பு மற்றும் தண்ணீர் இவைகளையே உணவாக உட்கொண்டார்கள். அதனால் அவர்களுடைய சரீரம் வெளுத்து வெளிறி காணப்பட்டது. மேலும் சோப்பு, எண்ணெய் கூட இல்லாமலும் அதிகமாகக் கஷ்டப்பட்டார்கள். அந்த நேரத்தில் அணிந்து கொள்ள அடுக்கடுக்காகத் தையல் போடப்பட்ட ஒரே ஒரு சட்டை மட்டும் தான் இருந்தது. கிருபாசனத்துடன் இருந்த தொடர்பை நிறுத்திய பிறகு தனிமையாக மலவிளையில் தேவனுடைய ஊழியத்தைச் செய்தார்கள். அவ்வேளைகளில் சில நேரங்களில் துதி பாடல்களையும், தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தும் சத்தத்தையும் கேட்டிருக்கிறார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்களிடம் "**அது வேறு ஒன்றுமல்ல, தேவதூதர்களின் ஆர்ப்பரிப்பு**" என்றார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

## 1.11 ஐயா அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டது

அதுவரையிலும் ஐயா அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படவில்லை. ஆனால் அவருடைய உபதேசத்தைக் கேட்ட ஜனங்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். அவர்கள் தேவனுடைய வழிநடத்துதலின்படியே நடந்தார்கள். பின்பு அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெற 40 நாட்கள் உபவாசம் இருக்க வேண்டுமென்று தீர்மானித்து உபவாசமும் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெற எதிர்பார்ப்போடு காத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படவில்லை.

அவர்கள் தேவனிடத்தில் **"முற்காலத்தில் உம்முடைய அப்போஸ்தலர்களால் அற்புதங்கள் அடையாளங்கள் நடைபெற்றன. எனக்கு ஆதி சபையின் அப்போஸ்தலர்களுக்கு நீர் கொடுத்த அந்த பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டுமென்று"** ஜெபம் பண்ணினார்கள். நாற்பதாவது நாளில் மாலை 5 மணி அளவில் அவர்களுக்கு சரீரத்தில் அதிக கஷ்டம் ஏற்பட்டது. உபவாசத்தினால் அவர்களுடைய சரீரம் மிகவும் பாதிக்கப்பட்டது என்று நினைத்தார்கள். ஆனாலும் அவர்கள் கேட்டுக் கொண்ட ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. இது ஒரு பேரிழப்பு என்று எண்ணிக் கொண்டு படுத்துவிட்டார்கள். அப்பொழுது **"எழுந்து ஜெபம் பண்ணு"** என்ற ஒரு அசரீரியை கேட்டார்கள். உடனே படுக்கையிலிருந்து எழுந்து ஜெபம்பண்ணினார்கள். உடனடியாக அவர்கள் தேவனுடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். அவர்கள் தேவனுடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட போது அவர்களது சந்தேகத்தைத் தீர்க்கும் வகையில் தேவன் அவர்களிடம், **"நான் உனக்கு ஆதிசபையின் அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த பரிசுத்த ஆவியைக் கொடுத்துள்ளேன்"** என்றார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! பின்பு **"பயப்படாதே"** என்று ஒரு அசரீரியை கேட்டார்கள். ஐயா அவர்கள் தொடர்ந்து பற்பல பாஷைகளில் பேசினார்கள். அடுத்த நாளில் கூட அவர்களால் தன் தாய் மொழியில் தெளிவாகப் பேச முடியவில்லை. கர்த்ருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

## 1.12 இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கர்த்தர் ஐயா அவர்களுக்குக் கட்டளையிட்டது

ஐயா அவர்கள் அநேகமுறை 40 நாட்கள் உபவாசம் இருந்தார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்களுக்கு அநேக காரியங்களைக் கற்பித்தார்.

ஆதி சபையின் ஊழியக்காரர்களால் செய்யப்பட்ட தேவ ஊழியத்தைச் செய்யும் படியாகவும், இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படியாகவும், கர்த்தருடைய பரிசுத்த இராப்போஜனம் கொடுக்கும் படியாகவும் தேவன் கட்டளையிட்டார். இதை ஐயா அவர்கள் கிருபாசனம் தலைமைப் போதகரிடம் சென்று கர்த்தருடைய கட்டளைகளை அறிவித்தார்கள். அதற்கு அவர் 5 அல்லது 6 வருடங்களுக்கு முன்பாகக் கர்த்தர் என்னிடமும் சொன்னார் என்றார். ஆகையால் ஐயா அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி தலைமைப் போதகரை மனவேதனையோடு கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் அவர் ஐயா அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை. "நான் ஞானஸ்நான ஆராதனை, விவாக ஆராதனை, அடக்க ஆராதனை நடத்தியிருந்தால் கொலை செய்யப்பட்டிருப்பேன் அல்லது சிறைச்சாலைக்குப் போயிருப்பேன்" என்று தலைமைப் போதகர் சொன்னார். உடனே சாது. G. தேவநேசன் ஐயா அவர்கள் **"நான் போகலாம். நீங்கள் ஜெபம் பண்ணுங்கள்"** என்று கூறினார்கள். தலைமைப் போதகர் ஐயா அவர்களிடம் சென்னையிலுள்ள சபையைப் பார்த்து வர சென்னைக்குச் செல்ல பணம் கொண்டு வரும்படி கூறினார்.

## 1.13 *கிருபாசனம் தலைமைப் போதகரை விட்டு விலகியது*

கிருபாசனம் தலைமைப் போதகர் தன்னுடைய கீழ்ப்படியாமையினால் அவருடைய ஆவிக்குரிய ஜீவியம் மாறுபட்டு வீழ்ச்சியின் மேல் வீழ்ச்சி அடைந்ததாயும் காணப்பட்டது. இது மற்றவர்களுக்கு தெரியாமலிருந்தது. ஐயா அவர்கள் பணத்தைக் கொண்டு வந்து தலைமைப் போதகரிடம் கொடுத்தார்கள். தலைமைப் போதகர் அவர்களிடம் ஜெபம்பண்ணும்படி கூறினார். ஆகையால் ஐயா அவர்கள் மேல் மாடிக்குச் சென்று ஜெபம் பண்ணினார்கள்.

அப்போது கர்த்தர் ஐயா அவர்களிடம் "**இவன் கீழ்ப்படியமாட்டான். நீ என்னுடைய சித்தம் செய். நான் உன்னை ஆசீர்வதிப்பேன்**" என்று பேசினார். ஏன் தேவன் தன்னோடு இவ்விதமாய் பேசினார் என்று யோசித்தார்கள். பின்பு தலைமைப் போதகர் ஐயா அவர்களுக்கு காப்பி வாங்கி கொடுத்தார். மறுபடியும் ஐயா அவர்கள் ஜெபம் பண்ணினார்கள். சிறிது நேரத்தில் கர்த்தர் இடி முழக்கம் போல் "**இந்தப் பொல்லாத ஊழியக்காரனை விட்டு விலகு. எனக்குக் கீழ்ப்படியாத இந்த ஊழியக்காரனிடமிருந்து பிரிந்து போ. உடனே புறப்பட்டுப் போ**" என்றார். உடனே ஐயா அவர்கள் தன்னுடைய பரிசுத்த வேதாகமத்தை எடுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டுப் போனார்கள்.

வழியில் கதவருகே தலைமைப் போதகர் நின்றார். அவர் ஐயா அவர்களிடம், "**தம்பி, கர்த்தர் என்ன சொன்னார்?**" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "**நான் உம்மை விட்டுத் தனியே பிரிந்து போகிறேன் பரலோக ராஜ்யம் செல்வதற்காகவே நான் இந்த தேவ பக்திக்குரிய வேஷத்தை அணிந்துள்ளேன். நான் தேவனுக்குத் துரோகம் செய்யமாட்டேன். கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுப்பேன், உமக்குக் கீழ்ப்படியமாட்டேன், உம்மை விட்டுத் தனியாகப் பிரிந்து போகிறேன். எனக்கு எப்படி தேவ ஊழியத்தைச் செய்ய வேண்டுமென்று தெரியாது. கர்த்தர் எந்த சபையோடு சேர்ந்து கொள்ளச் சொல்லுகிறாரோ அந்தச் சபையோடு சேர்ந்து கொள்வேன்**" என்று அவரிடம் கூறினார்கள். இப்படியாக அவர்கள் கிருபாசனம் தலைமைப் போதகரை விட்டு விலகினார்கள்.

பின்பு அவர்கள் கர்த்தரை நோக்கி, "**நான் ஒரு சிறு பையன். எனக்கு எப்படி தேவ ஊழியம் செய்ய வேண்டுமென்று தெரியாது**" என்று ஜெபம்பண்ணினார்கள். பின்பு கர்த்தர் அவர்களிடம், "**நான் உன்னுடனே இருக்கிறேன். என்னுடைய சித்தம் செய்! நான் உன்னை வழிநடத்துவேன்! பொறுமையாயிரு!**" என்றார். பின்பு

கிருபாசனம் தலைமைப் போதகரும், மற்ற போதகர்களும் மறுபடியும் மறுபடியும் பல வழிகளிலும் ஐயா அவர்களைத் தங்களோடு ஐக்கியப்படுத்திக் கொள்ள முயற்சி செய்தார்கள். ஆனால் ஐயா அவர்களைத் தங்களோடு ஐக்கியப்படுத்திக் கொள்ள முடியவில்லை. கடைசியாக ஐயா அவர்கள் அவர்களிடம், "**அவர் (கிருபாசனத்தின் தலைமைப் போதகர்) தேவ சித்தம் செய்யட்டும். அப்படிச் செய்தால் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சேர்ந்து கொள்கிறேன்**" என்று சொன்னார்கள்.

இறுதியில் கிருபாசனத்தின் தலைமைப் போதகரே ஐயா அவர்களைப் பார்க்க மலவிளைக்கு வந்தார். அவர் வருவதற்கு முந்தினநாள் கர்த்தர் ஐயா அவர்களிடம், "**அவன் நாளை இன்ன சமயத்தில் உன்னிடம் வருவான். அவன் உன்னிடம், "நான் ஓடு போட்ட ஒரு ஜெபவீட்டை உனக்குக் கட்டித் தருகிறேன்**" என்று சொல்லுவான். "**கவனமாயிரு! நான் உன்னுடனே கூட இருப்பேன்!**" என்று கூறினார். அதே போன்று அதே நேரத்தில் தலைமைப் போதகர் வந்து அதே வார்த்தைகளைக் கூறினார். ஆனால் அவருடைய வார்த்தைகளை ஐயா அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பின்பு ஐயா அவர்களிடம், "**நாம் ஐக்கியப்படுவதற்கு என்ன தடை?**" என்று கேட்டார். அப்பொழுது ஐயா அவர்கள் தலைமைப் போதகரின் ஜீவியத்தில் ஏற்பட்ட பாவத்தைக் குறித்துக் கேட்டார்கள். ஆனால் மாறாக அவர் தன்னுடைய பாவத்தை ஒத்துக் கொள்ளாமல் வேறுவிதத்தில் பழிகளைச் சுமத்தினார். கடைசியாகத் தலைமைப் போதகர் ஐயா அவர்களிடம், "**நீங்கள் வடக்கு பாக தேவ ஊழியத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். நான் தெற்கு பாக ஊழியத்தைக் கவனித்துக் கொள்கிறேன்**" என்றார். ஐயா அவர்கள் அதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் அவரை ஜெபவீட்டிற்கு வந்து பசியாறிச் செல்லுமாறு கூறினார்கள். ஆனால் அவர் அங்கு செல்லவில்லை. உடனடியாகத் தலைமைப் போதகர் அங்கிருந்து திரும்பி சென்று விட்டார்.

தலைமைப் போதகரின் வீழ்ச்சியைக் குறித்து ஐயா அவர்கள் மிகவும் கவலைப்பட்டு கர்த்தரிடம் தன்னை மலைக்கு அனுப்பி விடும்படி கேட்டார்கள். அப்பொழுது கர்த்தர், **"வீழ்ந்து போனவனைக் குறித்து கவலைப்படாதே"** என்று கூறினார். தன்னை தேவனுக்குச் சித்தமான சபையோடு ஐக்கியப்படுத்தும்படி தேவனிடத்தில் ஜெபம்பண்ணின போது கர்த்தர், **"பொறுமையாயிரு, தேவ சித்தம் செய்"** என்று கூறினார்.

கிருபாசனத்தின் தொடர்பை விட்டு விலகின பின்பு ஆலங்கோட்டையிலுள்ள யேகோவா இரட்சண்ய சபை என்ற வேறொரு பெந்தெகொஸ்தே சபையோடு ஐயா அவர்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. அவர்களுடைய செயல்களும் கர்த்தருக்கு விரோதமாக இருந்ததால் அவர்களையும் விட்டுப் பிரிந்தார்கள்.

மேலும் தன்னை வேறு ஏதாவது சபையோடு ஐக்கியப்படுத்துமாறு தேவனிடத்தில் ஜெபம் பண்ணினார்கள். ஆனால் தேவன் அவர்களை மற்ற எந்தச் சபையோடும் ஐக்கியப்படுத்தவில்லை. கர்த்தர் அவர்களிடம், **"என்னுடைய சபையை உன் மூலம் வெளிப்படுத்துவதற்கு நான் உனக்கு அநேக வாக்குத் தத்தங்களைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். உன்னை ஐக்கியப் படுத்துவதற்குத் தகுதியான சபை இந்த உலகில் வேறு எதுவும் இல்லை"** என்றார்.

ஏற்கனவே பரளியாற்றின் மறுகரையில் தேவ ஊழியத்தைச் செய்து கொண்டிருக்கும் போதே எரேமியா 33 : 3 ம் வசனம் ஐயா அவர்களுக்கு வாக்குத் தத்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

*"என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்"* *எரேமியா 33 : 3*

நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரமும், துதியும், கனமும், மகிமையும் சாதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

## 1.14 வேதாகமக் கல்வி அல்லது இறையியல் கல்வி

ஐயா அவர்கள் மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்ததால் சரியாகப் உபதேசம் பண்ண முடியவில்லை. எனவே வேதாகமக் கல்வி அல்லது இறையியல் கல்வி கற்கச் சென்றார்கள். அங்கு அவர்களுக்கு வகுப்பறையில் உட்கார விருப்பமுமில்லை. அவர்களுக்கு மனச் சமாதானமுமில்லை. அந்த இடத்தை விட்டு வந்து விட வேண்டுமென்று எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தபடியால், அந்த இடத்தை விட்டு திரும்பி வந்து விட்டார்கள். அடுத்தநாள் வேதாகம வகுப்புக்குச் சென்றார்கள். அங்கு அவர்களுடைய செயல்கள் முழுமையாகக் கர்த்தர் வெறுக்கிறதான கிரியைகளாகக் காணப்பட்டபடியால் அந்த இடத்திலும் அவர்களால் உட்கார முடியவில்லை. எனவே அந்த வேதாகம வகுப்பை விட்டு வெளியேறினார்கள். அதன்பின்பு வேறெந்த ஒரு வேதாகம வகுப்பிற்கும் செல்லவில்லை.

## 1.15 கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்களுக்கு நேரடியாகக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தது

ஐயா அவர்கள் அதன் பின்பு அதிகமான மனக்கவலையும், மன வேதனையுமுடையவராயிருந்தார்கள். இந்த நிலைமையிலிருந்தால் தேவ ஊழியத்தைச் செய்ய முடியாதே, முறையான கல்வி மூலமாகக் கிடைக்கக் கூடிய அறிவு, ஞானம் இல்லையே, போதிக்கக்கூடிய அறிவு, திறமை, ஞானம் இல்லையே

என்று எண்ணினார்கள். இந்த நினைவோடு அவர்கள் தேவனிடத்தில் அழுகையோடு ஜெபம் பண்ணினார்கள். அப்போது கர்த்தர் அவர்களிடம், "**மகனே, இவையெல்லாம் நீ கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்கள் அல்ல. நீ கற்றுக்கொள்ள வேண்டியது இந்த மனிதர்களிடமிருந்தல்ல. நான் உனக்குக் கற்றுத் தருவேன். நீ என்னுடைய வார்த்தைகளைக் கேள்**" என்றார். உடனே அவர்கள் கர்த்தரிடம், "**நான் உம்முடைய வார்த்தைகளைக் கேட்பேன். உமக்குக் கீழ்ப்படிவேன்**" என்றார்கள். அந்நாள் முதல் கர்த்தர் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். இரவு பகலாக தேவன் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். தேவன் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் போது அவர்கள் எல்லாத் தேர்வுகளிலும் வெற்றி பெற்றார்கள். கர்த்தர் அவர்களுக்கு ஊழியக்காரர்களைக் கொடுத்தார். எதிர்பாராத நிலையில், கிருபாசனத்திலிருந்து ஒரு தாயையும், ஒரு மூத்த ஊழியக்காரச் சகோதரியையும் கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை!

அநேகந்தரம் அவர்கள் 40 நாட்கள் உபவாசம் மேற்கொண்டார்கள். அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவாகிய தேவனிடம் உபவாசத்தோடு ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும்போது தேவன் அவர்களுக்கு ஊழிய வகுப்பினர், அவர்களுடைய பலவிதமான ஊழியங்கள், அவர்களுடைய ஸ்தானங்கள், அவர்களுடைய ஆவிக்குரிய வரங்கள், கனிகள் மற்றும் கிரியைகளைப் பற்றியும் கற்றுக் கொடுத்தார். மேலும் கடினமான உபவாசங்களின் போது கீழ்க்கண்ட ஆராதனைகளைக் குறித்தும் கற்றுக் கொடுத்தார். குழந்தைகள் பிரதிஷ்டை ஆராதனை, விவாக ஆராதனை, அடக்க ஆராதனை, ஜெபவீடு பிரதிஷ்டை ஆராதனை, ஞானஸ்நான ஆராதனை மற்றும் பரிசுத்த இராப்போஜன ஆராதனை. அவர்களுடைய கடினமான உபவாச ஜெபங்களின் மூலமாக தேவன் இந்தக் காரியங்களையெல்லாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை!

## 1.16 தேவ கோபாக்கினையான எரிச்சலின் அக்கினி முழு உலகத்தையும் பட்சிக்கும் அகோரமான தரிசனம்

*"மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப் போல் நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப் போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப் போல் கிடக்கும். கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும்; தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம் பண்ணுவார்."* *செப்பனியா 1 : 17, 18*

*ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள் மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தை எல்லாம் அவர்கள் மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்.* *செப்பனியா 3 : 8*

**ஒருமுறை சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுடைய கடினமான உபவாசத்தின் போது கர்த்தர் அவர்களுக்கு உலக முழுவதிலுமுள்ள ஆத்துமாக்கள் (ஜனங்கள்) பயங்கரமான நெருப்பினால் அழிக்கப்படுவதைக் காண்பித்தார். அகில உலகமும் கர்த்தரின் எரிச்சலின் அக்கினியால் பட்சிக்கப்பட்டது. இந்த பயங்கரமான அழிவை கிராமம் கிராமமாக, பட்டணம் பட்டணமாக, நகரம் நகரமாக, நாடு நாடாக ஐயா அவர்களுக்கு கர்த்தர் காண்பித்தார். பயங்கரமான தீயினால் உலகின் நான்கு திசைகளிலிருந்தும் அழிவு வருவதை ஜனங்கள் கண்டபோது நான்கு திசைகளிலிருந்தும் கும்பல் கும்பலாக,**

**திரள் திரளாக ஜனங்கள் இருதயம் பிளர்க்கக் கூடிய அழுகையுடன், மிகவும் பயந்து மையப்பகுதிக்குப் புகலிடம் தேடி ஓடினார்கள். பின்பு, திடீரென்று மையப் பகுதியிலும் ஜனங்களை முழுமையாக அழிக்கும்படி ஜனங்களுக்கு எதிராகத் தீ பற்றி எரிந்தது. அந்த மகாப் பயங்கரமானத் தீயினின்று அவர்களுக்குத் தப்ப ஒரு வழியுமேயில்லை.**

பின்பு கர்த்தர் அவர்களிடம், "**கடைசி நாட்களில் இந்த காரியங்கள் நடைபெறும். இந்தப் பயங்கரமானத் தீயினின்று மக்கள் தப்பும் படியாக, நீ உன் சொந்த ஜீவனை வெறுத்துப் பாடுபட வேண்டும்**" என்றார். மறுபடியும் கர்த்தர் அவர்களிடம், "**கடைசிக் காலத்திற்கென்று நான் மூன்று ஊழியக்காரர்களை எழுப்பினேன், மூவரில் இரண்டுபேர் எனக்குக் கீழ்ப்படியவில்லை. ஜனங்களுக்காகப் பாடுபட அவர்களுக்கு எந்த விருப்பமுமில்லை. என்னுடைய சித்தம் செய்கிற ஒரே ஒருவன் நீ தான். எனவே நீ மூன்று ஊழியக்காரர்களின் ஊழியத்தையும் செய்ய வேண்டும்**" என்றார். அந்நாள் முதலே ஐயா அவர்கள் தன் சொந்த ஜீவனை வெறுத்து ஜனங்களுக்காகப் பாடுபட்டார்கள். ஜனங்களின் அந்தப் பயங்கரமான அழிவைக் கண்டபோது ஐயா அவர்கள் இரவு பகலாக அழுதார்கள்.

## 1.17 காஞ்சிரக்கோட்டில் உள்ள கிருபாசனம் சபையில் உண்டான ஒரு தீர்க்கதரிசனம்

அந்தச் சமயத்தில் காஞ்சிரக்கோட்டிலுள்ள கிருபாசனம் சபையில் ஒரு தீர்க்கத்தரிசனம் உண்டானது. அந்தத் தீர்க்கத்தரிசனத்தில் கர்த்தர், "**காஞ்சிரக்கோட்டு தலைமைப் போதகராகிய சந்நியாசியையும், குன்னத்தூர் போதகனாகிய சந்நியாசியையும் என் சமுகத்தை விட்டுத் தள்ளிவிட்டேன். உங்களிடம் எவ்வளவோ பேசியும் நீங்கள் எனக்குக் கீழ்ப்படியவில்லை. என்னுடைய மகன் மலவிளையில் இருக்கிறான். அவன் ஒரு சிறுவன். நான் என்னச்**

**சொன்னாலும் அவன் எனக்குச் செவிகொடுப்பான். அவன் எனக்கு எப்போதும் சந்தோஷத்தைக் கொடுக்கிறான். அவன் மூலமாக நான் என் சபையை எழுப்பி இருக்கிறேன். மேலும் நான் அவன் மூலமாக மகிமையும் மகத்துவமுமான கிரியைகளைச் செய்வேன்"** என்று பேசினார். மேலும் கர்த்தர் அந்தத் தீர்க்கத்தரிசனத்தில் ஐயா அவர்களுக்கு *எரேமியா 1 : 5* ல் கொடுத்துள்ள வாக்குத்தத்தத்தைக் குறித்தும் பேசினார்.

*"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கத்தரிசியாகக் கட்டளையிட்டேன்"* என்று சொன்னார். *எரேமியா 1 : 5*

அதன் பின்பு காஞ்சிரக்கோட்டிலுள்ள கிருபாசனம் சபையிலிருந்து சிலர் மலவிளை சபையைப் பார்க்க வந்தார்கள். மலவிளையிலுள்ள சபை கர்த்தருடைய சபையாகச் செயல்படுகிறது என்று தெளிவாகக் கண்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! கர்த்தரிடம் தான் பண்ணிக்கொண்ட உடன்படிக்கையின்படி ஒருநாள் குன்னத்தூர் போதகரும் மலவிளை சபையில் ஊழியம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துடன் மலவிளைக்கு வந்தார். அந்த நாளுக்குப் பின்பு அவர் மலவிளைக்கு வரவேயில்லை.

அதன் பின்பு ஒருநாள் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் மிதிவண்டியில் தக்கலைக்குப் போய்க்கொண்டிருந்த போது, ஒரு அசரீரி, "**போய் குன்னத்தூர் சந்நியாசியை (குன்னத்தூர் போதகரை)ப் பார்"** என்று கேட்டது. உடனே அவர்கள் அவரைப் பார்க்கச் சென்றார்கள். கர்த்தர் பல வேறு காரியங்களை அவருடன் பேசினார். அவர், "நான் கீழ்ப்படிவேன்" என்று சொன்னார். ஆனால் அவர் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவில்லை.

## 1.18 ஐயா அவர்களின் 150 நாட்கள் தொடர்ச்சியான, நீண்ட, கடுமையான உபவாசம்

ஐயா அவர்கள் நீண்ட, மிகவும் கடினமான, உறுதியான, தீர்மானமான உபவாசங்களை மேற்கொண்டார்கள். இத்தகைய உபவாசங்களின் போது தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்களுக்கு தேவ கட்டளைகளையும், தேவ இரகசியங்களையும் கற்றுக் கொடுத்தார். அவர்களுடைய உபவாசங்கள் நீண்ட தொடர்ச்சியானதாக இருந்தன. ஒருமுறை 150 நாட்கள் தொடர்ச்சியான, கடின உபவாசத்தின் போது கர்த்தர், ஐயா அவர்களுக்குத் தம்முடைய சபையைக் குறித்தும், அவருடைய சபையைக் குறித்ததான வாக்குத்தத்தங்களைக் குறித்தும், அவரது சபையின் சத்தியத்தைக் குறித்தும், அவரது சபையின் ஆவிக்குரிய அனுபவங்களைக் குறித்தும், அவரது சபையின் உபதேசங்களைக் குறித்தும், அவருடைய சபை தேவனுடைய பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்படுவதைக் குறித்தும், அவரது சபையின் வரங்கள் மற்றும் கனிகளைக் குறித்தும் மற்றும் அவரது சபையின் அதிகாரத்தைக் குறித்தும் கற்றுக் கொடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

## 1.19 ஐயா அவர்களின் 6 மாதங்கள் தொடர்ச்சியான, நீண்ட கடுமையான உபவாசம்

அதன் பின்பு, ஐயா அவர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடனும், தலைக்கு எண்ணெய் தேய்க்காமலும், குளிக்காமலும் 6 மாதங்கள் தொடர்ச்சியாகக் கடுமையான உபவாசத்தை மேற்கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய சரீரத்தில் எந்தவிதமான துர்நாற்றமும் இல்லை. இவர்கள் 6 மாதங்கள் குளிக்காமல் இருந்திருக்கிறார்கள் என்று யாருமே சொல்லக் கூடாதபடி இருந்தது. அவர்கள்

அப்படிப்பட்ட விசேஷமான சரீரத்தைப் பெற்றிருந்தார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தம், நீதி, அன்பு, ஜீவன், வல்லமை மற்றும் மகிமை நிறைந்து காணப்பட்டார்கள். அந்த நேரங்களிலும் கூட ஒவ்வொரு வாரமும் இரண்டு அல்லது மூன்று ஆராதனைகளையும் நடத்தி வந்தார்கள். தேவனுக்கே மகிமை!

## 1.20 ஐயா அவர்களின் 10 மாதங்களும் ஒரு வாரமும் தொடர்ச்சியான, நீண்ட, கடுமையான உபவாசம்

ஐயா அவர்கள் அதன்பின்பு 10 மாதங்களும் ஒரு வாரமும் தொடர்ச்சியாக, நீண்ட, கடுமையான உபவாசம் மேற்கொண்டார்கள். இந்த நேரங்களிலும் கூட ஆராதனைகளையும் நடத்தி பிரசங்கமும் பண்ணினார்கள். இந்தத் தொடர்ச்சியான கடுமையான உபவாசத்தின் போது கடுங்காப்பியும், தண்ணீரும் மட்டுமே குடித்தார்கள். ஆகவே அவர்களது சரீரம் மெலிந்து நலிவுற்று அவர்களுடைய எலும்புகள் மிருதுவாகவும், வளையக் கூடியதாகவும் இருந்தன. இந்த உபவாசத்தின் போது கடுமையான பசியினால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். எனவே ஒரு துண்டு எலுமிச்சம் பழத் தோலைச் சாப்பிட்டார்கள். பின்பு, இந்தக் கீழ்ப்படியாமைக்காக கர்த்தரிடம் அதிகமாக அழுதார்கள்.

**பின்பு கர்த்தர் அவர்களை மிகவும் பெலப்படுத்தி, பத்திரமாகப் பாதுகாத்தார். இந்தக் கடுமையான உபவாசத்தின்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது மகா பரிசுத்தக் கரங்களால் ஐயா அவர்களைத் தூக்கியெடுத்து தட்டி கொடுத்து அணைத்துக் கொண்டு ஆறுதல்படுத்தித் தேற்றினார். அதன் பின்பு, ஐயா அவர்கள் நல்ல பெலனும் சக்தியும் பெற்றார்கள். அவர்கள் கர்த்தராகிய, தேவனாகிய இயேசுகிறிஸ்துவைத் தொட்டார்கள்; கர்த்தருடைய மார்பில் சாய்ந்தார்கள்; கர்த்தரை முத்தமிட்டார்கள்.** தேவனுக்கே மகிமை!

## 1.21 ஐயா அவர்கள் குத்தப்பட்டதும், அவர்களுடைய சாட்சியும்

ஒரு பெயர் கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்த பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த ஒரு சிறுமி, தேவனாகிய இயேசுகிறிஸ்துவால் சந்திக்கப்பட்டாள். எனவே அவள் ஒரு உண்மையான கிறிஸ்தவளாக வாழ வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் அவளால் வாழ முடியவில்லை. அவளுடைய குடும்பத்தினர் அவளை மிகவும் உபத்திரவப்படுத்தினர். அவள் மலவிளையைக் குறித்துக் கேள்விப்பட்டு, மலவிளைக்கு வந்து பிரசங்கம் கேட்க விரும்பினாள். ஆனால் அவளது குடும்பத்தினர் அவளை மலவிளைக்கு வர அனுமதிக்கவில்லை. அதனால் ஐயா அவர்களுக்குத் தான் மலவிளைக்கு வர முடியாமல் இருக்கும் பயங்கரத் தடைகளைக் குறித்து கடிதங்கள் எழுதி அனுப்பினாள். அப்பொழுது சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் அவளுக்கு, **"பொறுமையாயிரு, உன் வீட்டிலுள்ளவர்கள் சொல்வதைக் கேள்"** என்று பதில் அனுப்பினார்கள். இதற்கிடையில் ஐயா அவர்கள் ஒருநாள் கொற்றியோடு ஊழியத்தில் இருக்கும் போது திடீரென்று அவள் அவர்களைச் சந்திக்க வந்தாள். அந்த நாள் வரை அவளும் அவர்களைக் கண்டதில்லை. அவர்களும் அவளைக் கண்டதில்லை. பின்பு அவர்கள் அவளுக்குத் தேவையான புத்திமதிகளைக் கூறினார்கள். அந்த நாளிலே தானே அவள் தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றுவிட்டாள்.

பின்பு ஒருநாள் அவளுடைய குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து அவளிடம், "நீ மலவிளைக்குப் போக விரும்பினால் என்றைக்குமே இந்த வீட்டிற்குத் திரும்பி வரக்கூடாது. இல்லாவிட்டால் நாங்கள் சொல்லுகிறபடி கேள்" என்று கூறினார்கள். மீண்டும் அவர்கள் அவளை மிகவும் உபத்திரவப்படுத்தினார்கள். இறுதியாக அவள் அவர்களிடம், "நான் மலவிளையில் ஆராதனைக்குச் சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பி வருவேன்" என்றாள். அவர்கள் அவளை மிகவும் துன்புறுத்தி அவளிடம்,

"அங்கு போகிறாயா? அல்லது இங்கு தங்குகிறாயா? என்று சொல்" என்று கேட்டனர். அவள் அவர்களிடம், "நான் திரும்பிவர என்னை அனுமதிக்காவிட்டால் நீங்கள் சொன்னபடியே போய் விடுகிறேன்" என்றாள். அதன்பின்பு அவளுக்கு உணவு கொடுக்காமலும் பயங்கரமாக ஏசியும், அவளைக் குடும்பத்தினர் அதிகமாய்த் துன்பப்படுத்தினார்கள். அடுத்த நாள் அவள் இந்தக் காரியங்களை சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களிடம் அறிவிக்கும்படி மலவிளைக்கு வந்தாள். அதுவரையிலும் அவள் ஐயா அவர்களுடைய பிரசங்கத்தைக் கேட்டதில்லை. அவள் அவர்களிடம் தன் காரியங்களை அறிவித்தாள். அவர்கள் அவளைச் சமாதானப்படுத்தி அவளுடைய வீட்டிற்குச் செல்லும்படி அவளிடம் கூறினார்கள். ஆனால் அவள் பயத்தினால் தன் வீட்டிற்குச் செல்லவில்லை. எனவே ஐயா அவர்கள், அவளுடைய வீட்டிலிருந்து யாராவது ஒருவர் வருவார்கள். அப்போது அந்த நபரை சமாதானப்படுத்தி அவளை அவரோடு அனுப்பி விடலாம் என்று நினைத்தார்கள்.

மூன்றாவது நாள் ஐயா அவர்கள் அவர்களுடைய அறைக் கதவின் அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் கதவின் மேல் பாதி திறந்திருந்தது. அந்தப் பாதி திறந்திருந்த கதவின் மேல் விளிம்பில் கைகளை வைத்துச் சாய்ந்து கொண்டு தன் உடன் ஊழியக்காரர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது அந்தச் சிறுமியின் மூத்த சகோதரியின் கணவர் ஒளித்து வைத்திருந்த கத்தியுடன் மிகுந்த கோபத்தோடு ஐயா அவர்களிடம் வந்து, "தங்க வடிவு என்ற பெயரையுடைய பெண் இங்கு இருக்கிறாளா? அவளுடைய தாயார் செத்த பிரேதமாக கிடக்கிறாள். அவளை என்னுடன் அழைத்துச் செல்ல வந்துள்ளேன்" என்றான். அவளுடைய தாயாரைக் குறித்து சொன்னதெல்லாம் சுத்தப் பொய். ஐயா அவர்கள் கதவுப் பக்கம் நின்று கொண்டு, "அவள் வருவாள் உன்னுடன் அழைத்துக் கொண்டுபோ" என்றார்கள்.

உடனே அவன், "நான் அவளை அழைத்துக் கொண்டு போக வரவில்லை. அவளைக் குத்திக் கொலை செய்ய வந்தேன்" என்றான். உடனே சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் கதவுப் பக்கத்திலிருந்து, "நீ அவளைக் கொலை செய்ய முடியாது. என்னைக் குத்திக் கொன்ற பிறகு தான் இந்த இடத்திலுள்ள யாரையாவது கொல்ல முடியும்" என்றார்கள். அதற்கு அவன் அப்படியானால் உம்மைக் குத்துவேன்" என்றான். அதன்பின்பு சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் கதவுப்பக்கத்திலிருந்து அவனிடம், "நான் அதை ஏற்கனவே சொல்லி விட்டேனே" என்றார்கள். அவன் மறுபடியும், மறுபடியும், "நான் உம்மைக் குத்தமாட்டேன், நான் உம்மைக் குத்தமாட்டேன்" என்று சொன்னான்.

இப்படி அவன் மறுபடியும், மறுபடியும் அவர்களைக் குத்தமாட்டேன் என்று சொல்லிக் கொண்டே திடீரென்று ஐயா அவர்களைக் குத்தி விட்டான். அவர்களுடைய கழுத்தின் பின் பகுதியில் 6 அங்குல நீண்ட கத்தியால் அவர்களைக் கொல்லும் படியாகப் பயங்கரமாய்க் குத்தினான். அந்தக் கத்தி அவர்களுடைய ஈரல் கணு வரை உள்ளே பயங்கரமாய்ச் சென்றது. பின்பு அந்த மனிதன் அந்தக் கத்தியால் அவர்களுடைய காயத்தின் மூலமாகத் தலையைத் துண்டித்துக் கொலை செய்யும்படி பயங்கரமாக முயற்சி செய்தான். எனவே அவன் அந்தக் காயத்தின் வழியாக அதே கத்தியினால் அவர்களுடைய கழுத்தைப் பயங்கரமாகக் குடைந்தான். அதனால் அந்தக் காயம் மிகவும் பெரிதான மரணத்திற்கேதுவான காயமானது. ஆனால் அவன் நினைத்தபடி ஒன்றும் தலையைத் துண்டிக்க முடியவில்லை. பின்பு அவன் அந்த காயத்தில் இருந்து கத்தியை எடுத்து ஐயா அவர்களுடைய இடது காது அருகே பயங்கரமாகக் குத்தினான். இந்த காயமும் மரணத்திற்கேதுவான காயமாகும். பின்பு அவனுடைய கத்தியால் மூன்றுமுறை மீண்டும் மீண்டும் குத்தினான். சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களின் நரம்புகள்

பயங்கரமாய் வெட்டப்பட்டுத் திறந்தன. இரத்தம் பயங்கரமாய்க் காயங்களிலிருந்து வடிய ஆரம்பித்தது. மொத்தமாக அவர்கள் ஐந்து குத்துகளினால் 5 காயங்கள் அடைந்தார்கள். எவ்வளவு பயங்கரமான காரியம் இது!

முதலில் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் எப்படி அந்த மனிதன் தன்னைக் குத்தினான் என்று அறியவில்லை. அவர்களை அவன் குத்தியபோது அவர்களுடைய உடன் ஊழியக்காரர்கள் சத்தமிட்டு அழுதுகொண்டு அவர்களுக்கு முன்பாக இறங்கி வந்தார்கள். அப்பொழுது ஐயா அவர்கள் அவன் தன்னைக் குத்திவிடுவான் என்று பயந்து சத்தமிட்டு அழுதுகொண்டு அவர்கள் முன் இறங்கி வந்தார்கள் என்று நினைத்தார்கள். ஆகவே அவர்களை ஐயா அவர்கள் தனக்குப் பின்னாக வைத்துக் கொண்டார்கள். அதன் பின்பு அவர்கள் தனது இடது காதருகில் ஏதோ சுடுவது போன்று உணர்ந்தார்கள். அவர்கள் அதில் கை வைத்து பார்த்த போது அது இரத்தத்தின் சூடாக இருந்தது. அப்போது தான் அவனால் தான் குத்தப்பட்டதை அறிந்தார்கள். அதனால் தான் ஊழியர்கள் சத்தமிட்டு அழுகிறார்கள் என்றும் அறிந்து கொண்டார்கள். பிறகு ஐயா அவர்கள் தன் கழுத்திற்குப் பின்புறமும் சுடுவது போன்று உணர்ந்தார்கள். அந்த இடத்தில் அவர்கள் கையை வைத்தபோது அவர்களுடைய விரல்களுள் ஒன்று காயத்தின் உள்ளே சென்றது. அதன்பின்பு தான் கழுத்திற்குப் பின்புறத்தில் உள்ள மரணத்திற்கேதுவான காயத்தைக் குறித்து அவர்கள் அறிந்தார்கள். அதன் பின்பு மற்ற மூன்று காயங்களைக் குறித்தும் அவர்கள் அறிந்தார்கள்.

அப்போது ஐயா அவர்களைக் குத்தினவன் "நான் என் வீட்டிற்குப் போய் என்னுடைய மனைவி மக்களைக் கொன்றுவிட்டு நானும் இறந்துவிடுவேன்" என்றான். ஆகையால் ஐயா அவர்கள் அவனைப் பிடிக்கும்படி தன் உடன் ஊழியக்காரர்களைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் அவனைப் பிடித்து

தென்னை நாரினால் செய்த கயிற்றால் அவனது கைகளைக் கட்டினார்கள். அதற்கு முன்பே அவர்கள் அவனுடைய கத்தியை அவனிடமிருந்து எடுத்துக் கொண்டார்கள். ஆனால் யாருமே அவனுக்கு எந்த உபத்திரவமோ, இடையூறோ செய்யவில்லை.

உடனே இந்த உணர்ச்சிகரமான செய்தியைக் கேட்ட அந்த இடத்து ஜனங்களும் மற்ற பல்வேறு இடங்களிலுள்ள மக்களும் மகா கோபத்துடனும் பரபரப்புடனும் வந்து கூடினார்கள். ஆனால் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் ஜனங்களைச் சமாதானப்படுத்தி அமைதலாக்கினார்கள். பின்பு அந்த ஜனங்கள் ஐயா அவர்களைத் தன்னுடைய அறைக்குள் செல்லும்படி கூறினார்கள். ஆனால் ஐயா அவர்கள் அந்த மனிதனைக் கோபத்துடன் இருக்கும் ஜனக்கூட்டத்தினின்று பாதுகாக்கவும், ஜனங்களை சமாதானப்படுத்தி அமைதிப்படுத்தவும் தன் அறைக்குள் செல்லாமல் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். அதனால் அவர்களுடைய காயங்களிலிருந்து மீண்டும் இரத்தம் வடிய ஆரம்பித்தது. பின்பு ஐயா அவர்கள் பால் காப்பி கொண்டு வரும்படி ஜனங்களிடம் கூறினார்கள். அவர்கள் கொண்டு வந்தார்கள். முதலாவது ஒரு குவளையில் அந்தக் காப்பியை ஊற்றி குத்திய மனிதனுக்குக் கொடுத்தார்கள், அவன் குடித்தான். அந்த மனிதன் தன்னுடைய பொல்லாத செயலைக் குறித்து வருத்தப்பட்டு, ஜனங்கள் தன்னைக் கொன்று விடுவார்களோ என்று அதிகமாய்ப் பயந்து கொண்டு இருந்தான். அப்போது சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் அந்த மனிதனிடம் "**நாங்கள் அதுபோல் செய்யமாட்டோம்**" என்று கூறினார்கள். மேலும் அவர்கள் அவனிடம் உண்மையான கிறிஸ்தவ வாழ்வைக் குறித்தும், யாருக்கும் பழிக்குப்பழி செய்யாததைக் குறித்தும், ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்தும் சொன்னார்கள். திரும்பவும் அவர்கள் அவனிடம், "**தம்பி, நீ இரட்சிக்கப்பட வேண்டும். பேய்களையும், பிசாசுகளையும் வணங்காதே வீட்டிற்குப் போய்**

**உன்னுடைய பேய்க் கோயில்களை அழித்துவிடு. இயேசுகிறிஸ்துவே மெய்யான தேவன். நான் அவனுடைய பிள்ளை. நீ எனக்குச் செய்தது போல வேறு யாருக்கும் விரோதமாகவும் இத்தகையச் செயலைச் செய்யாதே"** என்றார்கள். அவர்களைக் குத்தினவனுக்கு விரோதமாக எந்தப் பழியும் வாங்கவில்லை, குற்றவியல் வழக்குத் தொடரவுமில்லை. அவர்களுடைய காயங்களுக்காக மருந்தோ, மருத்துவ சிகிட்சையோ எடுக்கவுமில்லை. தேவனுக்கே மகிமை!

ஐயா அவர்கள் அந்தக் குத்திய மனிதனையும் கோபமுற்ற கூட்டத்தினரையும் சமாதானப்படுத்திக் கொண்டு அங்குமிங்கும் சென்று கொண்டிருந்ததால் அவர்களுடைய இரத்தம் முழுவதும் அவர்களது சரீரத்திலிருந்து காயங்களின் வழியாக வெளியே வந்துவிட்டது. கடைசியாக நுரை போன்ற திரவம் அவர்களுடைய காயங்களிலிருந்து வந்தது. பின்பு அவர்களுடைய சரீரத்தின் நிறம் கருநீலமாக மாறியது. அந்த மனிதனிடம் அவர் பேசிக் கொண்டிருந்த போது அவர்களுடைய வாந்தி தண்ணீராக வந்தது. அவர்களுடைய பெருவிரல்களிலிருந்து ஜீவன் குறுகிக் கொண்டே வருகிறதையும் அவர்கள் உணர்ந்தார்கள். மேலும் அவர்களுடைய குடல்களிலிருந்து வலி ஏற்பட்டு அவை ஒன்றாகத் திரண்டு கீழிலிருந்து மேல் நோக்கி வருவது போன்றும் உணர்ந்தார்கள். சுய நினைவையும் இழந்தார்கள். உடனே அவர்களுடைய சரீரத்திலிருந்து உயிர் பிரிந்தது. 3 நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் அவர்களுடைய உயிர் அவர்களுடைய சரீரத்திற்குள் வந்தது, சுய நினைவு வந்தது. அனைவரும் மிகுந்த சத்தமிட்டு அழுது கொண்டிருந்தார்கள். மீண்டும் சிறிது நேரம் கழித்து அவர்கள் அதே நிலையை அடைந்தார்கள். மீண்டும் சுய நினைவை இழந்தார்கள். மேலும் மீண்டும் அவர்களுடைய உயிர் அவர்களுடைய சரீரத்திலிருந்து 3 நிமிடங்கள் பிரிந்து சென்று மீண்டும் சுய உணர்வு வந்ததை உணர்ந்தார்கள். பிறகு அதே நிலையை

அடைந்தார்கள். மீண்டும் ஒரு நிமிடம் உயிர் பிரிந்து மீண்டும் உயிர் திரும்பி சரீரத்திற்குள் வந்தது. சுய நினைவு இழந்து உடனடியாக உயிர் அவர்களுக்குள் வந்தது. அதன்பிறகு அத்தகைய பயங்கரமான காயங்களினிமித்தம் உண்டான அப்படிப்பட்ட நிலையை மீண்டும் அவர்கள் அடையவில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

அதன் பிறகு ஐயா அவர்கள் அந்த மனிதனை அவனுடைய வீட்டிற்குப் பத்திரமாக அனுப்புவதற்குத் தேவையான காரியங்களையும் ஏற்பாடுகளையும் செய்தார்கள். இதற்கிடையில் அவர்கள் சிலரை காவல் நிலையத்திற்கு அனுப்பி, ஐயா அவர்கள் அவர்களுடைய காயங்களுக்கு எந்த மருந்தும் எடுக்கமாட்டார் என்றும், குற்றவியல் புகார் எதுவும் குத்திய மனிதனுக்கு எதிராகக் கொடுக்க மாட்டார்கள் என்றும், அந்த மனிதனுக்கு காவலர் பாதுகாப்பு கொடுக்க இயலுமா? என்றும் கேட்டார்கள். ஆனால் காவலர்கள் அந்த மனிதனுக்கு எதிராகப் புகார் கொடுக்காத நிலையில் தங்களால் எதுவும் செய்ய இயலாது என்று அறிவித்தனர். மேலும் காவலர்கள் அவர்களிடம், "சாமி (சந்நியாசி அல்லது உலகத்தையும் உலக இன்பத்தையும் விட்டு வெறுத்தவர்) சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் என்ன சொல்லுகிறாரோ அதை நாங்கள் கேட்கிறோம். மேலும் இனி நடக்க வேண்டிய காரியங்களையும் நாங்கள் பார்த்துக் கொள்ளலாம்" என்றார்கள். பின்பு அவர்கள் அந்த மனிதனை ஒரு மகிழுந்தில் (காரில்) அவனுடைய வீட்டிற்குப் பத்திரமாக அனுப்பி வைத்தார்கள். இந்தக் காரியத்திலும் கர்த்தர் ஐயா அவர்களை மகிமையாகப் பாதுகாத்தார். தெய்வீக சுகமளிப்பவராகிய நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்களுடைய இரண்டு சாவுக்கேதுவான காயங்கள் உட்பட ஐந்து காயங்களையும் மருந்தோ அல்லது மருத்துவ

சிகிட்சையோ இன்றி அற்புதமாகக் குணமாக்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

## 1.22 ஐயா அவர்களின் 13 மாதங்களும் நான்கு நாட்களும் தொடர்ச்சியான, நீண்ட, கடுமையான உபவாசம்

ஐயா அவர்கள் 10 மாதங்களும் 1 வாரமும் தொடர்ச்சியான கடின உபவாசத்திற்குப்பின் இரண்டு மாதங்களுக்குள்ளாக மேலே குறிப்பிட்ட சம்பவம் அவர்களுக்கு ஏற்பட்டது. விரைவில் குத்தப்பட்ட அவர்களுடைய சரீரம் ஆரோக்கியமாயும் கொழுமையாயும் மாறியது. அதன்பின்பு ஐயா அவர்கள் 13 மாதங்களும் நான்கு நாட்களும் தொடர்ச்சியான கடினமான உபவாசத்தை மேற்கொண்டார்கள். இந்த உபவாசத்தின் போது ஐயா அவர்களுக்கு பயங்கரமான காய்ச்சல், முதுகு வலியுடன் ஒரு பயங்கரமான நோய் தாக்கியது. ஒரு நிமிடங்கூட அவர்களால் படுத்திருக்கவோ உட்காரவோ முடியாது. ஐயா அவர்களுடைய நோய் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இதை அறிந்த அவ்விடத்தாரும் வேறு இடங்களிலுமிருந்தும் அவர்களைப் பார்ப்பதற்கு வந்தனர். அவர்களைக் கண்ட பின்பு மிகுந்த மனக்கவலையுடன் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். பலவிதமான மன அழுத்தத்தினால் ஐயா அவர்கள் தனது கட்டிலை அவர்களுடைய அறைக்கு வெளியே திறந்த வெளியில் போட்டு அதில் படுத்திருந்தார்கள். நாளாக நாளாக அநேக ஜனங்கள் வந்து அவர்களுடைய நோயைக் குறித்து விசாரித்தார்கள். விசாரித்த ஜனங்களிடம் ஐயா அவர்கள், மிகவும் அதிகரித்து உள்ளது என்று சொன்னார்கள்.

சுகவீனமாயிருந்த ஆரம்பத்தில் ஐயா அவர்கள் மரவள்ளிக்கிழங்கு, உப்பு மற்றும் மிளகாய் சாப்பிட்டுக் வந்தார்கள். அதன்பின்பு மாங்காய்ப் பிஞ்சு

சாப்பிட்டார்கள். பின்பு அவைகளைச் சாப்பிட வெறுத்தார்கள். சாப்பிடுவதை நிறுத்தி விட்டார்கள். அவர்களால் வேறு எதையும் சாப்பிட முடியவில்லை. அவர்களுடைய நோய் மிக மிக அதிகமாக இருந்தது. அவர்களைப் பார்க்க வந்தவர்கள் மறுநாள் விடிவதற்குள் அவர்கள் மரித்துப் போவார்கள் என்று நினைத்தார்கள். ஆகவே அவர்களைப் பார்க்க வந்த ஜனங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்று விட்டு மாலையில் மீண்டும் திரும்பி மலவிளைக்கு வந்து தங்க வேண்டும் என்ற முடிவுடன் தங்கள் வீடுகளுக்குச் சென்றனர். ஆனால் மாலை நெருங்க நெருங்க ஆபத்தான நிலைமைக்குரிய அவர்களுடைய நோய் படிப்படியாகக் குறைய ஆரம்பித்து அவர்கள் படிப்படியாக நல்ல சுகத்தைப் பெற்றுக் கொண்டேயிருந்தார்கள். அதன் பின்பு ஜனங்களிடம் பேச ஆரம்பித்தார்கள். தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்ற ஜனங்கள் ஐயா அவர்களுடைய ஆபத்தான நிலையை நினைத்து மிகுந்த மனக் கவலையுடன் வந்தார்கள். ஆனால் அவர்களைப் பார்த்தவுடன் அவர்களைக் குறித்து மிகுந்த ஆச்சரியத்துடன், "ஐயா எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டனர். அவர்கள், **"என்னுடைய நோய் குறைந்து விட்டது. நான் ஆரோக்கியமாக உணர்கிறேன்"** என்றார்கள். ஜனங்கள் மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் வீடுகளுக்குச் சென்றனர். நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்களுக்கு எந்த மருந்தும், மருத்துவ சிகிட்சையுமில்லாமல் அவர்களுடைய அந்தச் சாவுக்கேதுவான நோயை அற்புதமாகக் குணமாக்கினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

மேலும் எண்ணற்ற 40 நாட்கள் தொடர்ச்சியான கடின உபவாசங்களை ஐயா அவர்கள் மேற்கொண்டார்கள். எண்ணற்ற 40 நாட்கள் தொடர்ச்சியான கடின மவுன உபவாசங்களை மேற்கொண்டார்கள். ஆனால் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும்

பொதுக்கூட்டங்கள் நடத்தினார்கள். ஒவ்வொரு மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமையில் ஊழியர்கூட்டத்தையும் நடத்தினார்கள். தேவனுக்கே மகிமை!

## 1.23 ஐயா அவர்களின் ஒரு 40 நாட்கள் தொடர்ச்சியான நீண்ட கடின உபவாசத்தின் போது கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்யும்படி மிக்கேல் என்ற தேவதூதனை அனுப்பியது

ஐயா அவர்களின் ஒரு 40 நாட்கள் தொடர்ச்சியான, நீண்ட, கடினமான, மவுன உபவாசத்தின் போது அவர்கள் மிக, மிக பெலவீனத்தோடு காணப்பட்டார்கள். அப்போது அந்த 40 நாட்களிலும் கர்த்தர் மிக்கேல் என்ற ஒரு தேவதூதனை ஐயா அவர்களுக்கு உதவி செய்யும்படி அனுப்பினார். ஐயா அவர்கள் படுக்கையிலிருந்து எழும்ப விரும்பும் போது சற்று தூரத்தில் தூதன் நின்று கொண்டு மெதுவாக அவனுடைய கைகளை ஐயா அவர்களைத் தொடாமல், அவர்களிடமாக உயர்த்தினான். அந்நேரமே தேவதூதனுடைய கரங்களிலிருந்து வல்லமையும் பெலனும் வெளிப்பட்டு ஐயா அவர்கள் படுக்கையிலிருந்து எழும்பி நடந்து, அவர்களுடைய தினசரி வேலையைச் செய்யச் செய்தது. நிமிர்ந்து நடந்து செல்லும் போது தடுமாறினாலோ அல்லது சரிந்தாலோ அல்லது சாய்ந்தாலோ, அவர்கள் தடுமாறி விழுந்து விடாமல் பாதுகாக்கும்படித் தேவதூதன் தன் சொந்தக் கரங்களை அவர்களிடமாக தேவைக்கேற்றபடி காண்பித்தான். மேலும் அவர்கள் ஜெபம்பண்ண முழங்காற்படியிடவோ அல்லது படுக்கவோ அல்லது படுக்கைக்குச் செல்லவோ அல்லது எதையாகிலும் எடுக்கவோ அல்லது எதையாகிலும் வைக்கவோ விரும்பும் போது சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருக்கும் தேவதூதன் மெதுவாகக் குறிப்பிட்ட வேலைக்குத் தகுந்தாற்போல் தன் சொந்தக் கரங்களைக் காண்பித்தான். எவ்வளவு வல்லமையும், அற்புதமுமான செயல் இது! இந்த உபவாசத்திற்குப் பின்பு கர்த்தர்

தமது தீர்க்கதரிசனத்தில் "**பரலோகத்தின் தூதர்களும் இவனைப் பார்த்து நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்**" என்று பேசினார். தேவனுக்கே மகிமை!

**ஒருநாள் கர்த்தர் அவர்களிடம் உணவு உட்க்கொள்ளுமாறு கூறினார்.** அதற்கு ஐயா அவர்கள், **"உம்முடைய அன்பின் காரணமாக என்னிடம் சொல்லுகிறீரா? அல்லது உம்முடைய சித்தத்தின்படி என்னிடம் சொல்லுகிறீரா?"** என்று கேட்டார்கள். அதற்குக் கர்த்தர், "**நான் என்னுடைய அன்பினாலே இதைச் சொன்னேன். இது என்னுடைய சித்தமல்ல. உன்னுடைய உபவாசங்கள் நிறைவடையவில்லை**" என்றார். ஆகையால் ஐயா அவர்கள் தொடர்ச்சியாக அவருடைய சித்தப்படி உபவாசங்கள் மேற்கொண்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

ஐயா அவர்களின் தொடர்ச்சியான கடினமான உபவாசங்களினிமித்தம் அவர்களுடைய சரீரம் மிகவும் பெலவீனமடைந்து காணப்பட்டதால், அவர்கள் இருமும் போது அடிக்கடி அவர்களுடைய கபம் இரத்தத்துடன் வெளியேறியது. சில நேரங்களில் அவர்களுடைய சிறுநீரும், கழிவும் இரத்தத்துடன் வெளியேறியது. அவர்கள் மிகவும் பொறுமையுடன் இத்தகைய கஷ்டங்களையெல்லாம் தன்னுடைய சரீரத்திலே தாங்கிக் கொண்டார்கள்.

தொடர்ச்சியான கடினமான உபவாசங்களின் போதும் மற்ற நேரங்களிலும் பலமுறை சுய நினைவு இழந்து காணப்பட்டார்கள். அந்நேரங்களில் அவர்களுடைய கைகளும், கால்களும் தலையும் எப்பக்கமானாலும் சரிந்து விழும். எதையும் அறியாமல் அவர்களுடைய கைகளும், கால்களும், தலையும் சரீரமும் அங்குமிங்கும், முன்னும்பின்னும் மேலும் கீழும் சென்றன. அவர்களுடைய கடைசி நாட்களில் ஒவ்வொரு வாரமும் தொடர்ச்சியாக சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களிடம், **"காலம் செல்ல செல்ல நான் பெலவீனமடைந்து**

**கொண்டிருக்கிறேன்"** என்று சொன்னார்கள். அந்த நேரமே அப்பா அவர்கள் தங்களுடைய பரிதாபமான நிலைமையைக் குறித்தும் சபையினுடைய பரிதாபமான நிலைமையைக் குறித்தும், ஊழியத்தின் பரிதாபமான நிலைமையைக் குறித்தும் பரிதபித்தார்கள்.

## 1.24 ஐயா அவர்கள் சுய நினைவை இழந்தது

ஒருநாள் மாலை நேரத்தில் ஐயா அவர்கள் ஒரே நேரத்தில் சாய்வதற்கோ அல்லது ஓய்வு எடுக்கவோ வசதியான ஒரு கைப்பிடி உடைய இரட்டை நாற்காலியில் உட்கார்ந்து இருந்தார்கள். அந்நேரத்தில் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்கள் ஐயா அவர்களுக்கு முன்னால் அவர்களுடைய கால்களுக்கு மிக அருகில் தரையில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் சில தனிப்பட்ட காரியங்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஐயா அவர்கள் சுயஉணர்வு அற்ற நிலையில் நாற்காலியின் அந்த ஒரு கைப்பிடியில் விழுந்து அதின் மீது சாய்ந்து காணப்பட்டார்கள். உடனே அப்பா அவர்கள் மிகவும் எச்சரிப்படைந்து மிகவும் சத்தமிட்டு, **"எனக்க அப்போ! எனக்க அப்போ!"** என்று அழுதார்கள். அதாவது **"என் அப்பா! என் அப்பா!"** என்பதாகும். 'அப்பா' என்றால் தகப்பன் என்று பொருள். உடனடியாக அப்பா அவர்கள் ஐயா அவர்களை அணைத்துக் கொண்டு அவர்களுடைய கரங்களால் ஐயா அவர்களுக்கு எந்த கஷ்டமும் கொடுக்காமல் பாதுகாப்பாகத் தூக்கினார்கள். அந்த நேரத்தில் அப்பா அவர்களின் நிலைமை மிகவும் நிர்பந்தமாகக் காணப்பட்டது. நம்முடைய கர்த்தரும் தேவனுமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மிகவும் பரிதாபத்தோடு அவர்கள் இருவரையும் கண்ணோக்கினார். இரண்டு நிமிடங்களில் ஐயா அவர்கள் சுய உணர்வு அடைந்தார்கள். கர்த்தர் அவர்களுக்குப் புத்துயிர் கொடுத்தார். *நம்முடைய*

*பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரமும், துதியும் கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.* பின்பு ஐயா அவர்கள் சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களிடம் நடந்தவைகளைக் குறித்துக் கேட்டார்கள். அவர்கள் இருதயம் மயக்கமடைந்ததையும், அவர்களுடைய ஆவி உயிர்ப்பிக்கப் பட்டதையும் பற்றி அப்பா அவர்கள் கூறினார்கள். எவ்வளவு பெரிதான இரக்கம் தேவனுடையது! அப்போதும் கூட அப்பா அவர்கள் தங்களுடைய பரிதாபமான நிலைமையைக் குறித்தும், சபையின் பரிதாபமான நிலைமையைக் குறித்தும், ஊழியத்தின் பரிதாபமான நிலைமையைக் குறித்தும் மிகவும் பரிதபித்தார்கள்.

## 1.25 கர்த்தர் ஐயா அவர்களுக்கு அவர்கள் உயிரோடிருக்கும்படியாக மூன்றுமுறை பரலோகத்தின் உணவைக் கொடுத்தது

ஐயா அவர்களிடம் கர்த்தர் எவைகளையெல்லாம் சொன்னாரோ அவைகளையெல்லாம் அவர் சொன்னபடியே செய்வதுதான் அவர்களது வேலை. எப்போதும் அவர்கள் கர்த்தரிடம், "**கர்த்தாவே உம்முடைய சித்தம் எதுவோ இதுவே எனக்கு பாக்கியம்**" என்று சொல்லுவார்கள். அவர்களுடைய வாழ்க்கையைக் குறித்து அவர்களுக்கு எந்தக் கவலையும் கிடையாது. ஒருமுறை 15 நாட்கள் தொடர்ச்சியாக தண்ணீர் அல்லது வேறு பானம் எதுவுமின்றி உணவு எடுக்காமலே கடினமான உபவாசம் மேற்கொண்டார்கள். அப்போது அவர்களது உதடுகள் வெடித்துப் பிளவுபட்டது. பின்பு அவர்கள் அதிகமான தாகத்தினால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஒருமுறை 17¼ மணி நேரமும் சில நிமிடங்களும் தொடர்ச்சியாகக் கண்களை மூடி ஜெபம் பண்ணினார்கள். மற்றொருமுறை 21

மணிநேரமும் 11 நிமிடங்களும் தொடர்ச்சியாகக் கண்களை மூடி ஜெபம் பண்ணினார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

**அநேகந் தடவைகளில் அவர்களுடைய தொடர்ச்சியான கடின உபவாச நாட்களில் தொடர்ச்சியான கடின உபவாசங்களினிமித்தம் மரணத்திற்கு மிகச் சமீபமாய்க் காணப்பட்டார்கள். தொடர்ச்சியான கடின உபவாச நாட்களில் மிகுந்த பசியினாலும், மிகுந்த பெலவீனத்தினாலும் ஏற்பட்ட கஷ்டங்களின் போது தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்களை உயிரோடே வைப்பதற்கு அவர்களுக்கு மூன்று முறை பரலோகத்தின் உணவைக் கொடுத்தார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

ஐயா அவர்கள் கர்த்தருடைய சபையாகிய அவருடைய சபையாகிய சரீரத்திற்காக கிறிஸ்து பட்ட பாடுகள் உபத்திரவங்களில் மீதியானதை அவர்களுடைய சரீரத்திலே இப்படியாக நிறைவேற்றினார்கள்.

*"இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்."*

*கொலோசெயர் 1 : 24*

## 1.26 ஐயா அவர்கள் பேச்சிப்பாறை அணைக்கு வடக்கே, தூரமான, அடர்ந்த வனப்பகுதியில் ஜெபம்பண்ணும்படி சென்றது

ஐயா அவர்கள் ஒருமுறை பேச்சிப்பாறை அணையின் வடக்கே, தூரமான, அடர்ந்த வனப்பகுதியின் (அடகாடு) மிகவும் உள்பகுதிக்கு ஜெபிப்பதற்காகத் தனிமையில் செல்ல வேண்டுமென்று விரும்பினார்கள். அங்கு மிகவும் விஷம் நிறைந்த பாம்புகள், மிகவும் மூர்க்கமான வன விலங்குகள், மிகவும் விஷம் (நச்சு)

நிறைந்த தாவரங்கள், மிகவும் ஆபத்தான மூடுபனி அல்லது பனி மூட்டம் காணப்பட்டன. அது மிகவும் ஆபத்துக்குரிய இடம். அவர்கள் பேச்சிப்பாறை அணைக்குச் சென்று, சில மலைவாழ் மக்களிடம் அந்தக் குறிப்பிட்ட இடத்தைக் காண்பிக்கும்படி கேட்டார்கள். அவர்களுக்குப் பணமும் தரலாம் என்று சொல்லி, பணமும் கொடுத்தார்கள். முதலில் அந்த ஜனங்கள் அந்த இடத்தைக் காண்பிக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். நீண்ட நேரமாகியும் அவர்கள் வரவில்லை. அந்த நேரத்தில் ஐயா அவர்கள் ஒரு இடத்திலிருந்து தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள். நீண்ட நேரமாகியும் அந்த ஜனங்கள் வராததால் ஐயா அவர்களே சென்று அழைத்தார்கள். அந்த ஜனங்கள் ஐயா அவர்களிடம், "**சாமி (உலகத்தையும் உலக இன்பங்களையும் துறந்தவர்) இங்கு கருங்சாத்தி என்ற மிகவும் கொடிய விஷம் நிறைந்த அந்த வனப்பகுதியில் உள்ள பாம்பு, கரடி, யானை, புலி மற்றும் பல உண்டு. சாமி, நீங்கள் அங்கே போகக் கூடாது. நாங்கள் உமக்கு வேறொரு இடத்தைக் காட்டுகிறோம்**" என்றனர். ஆனால் ஐயா அவர்கள், "**பயப்படாதேயுங்கள், உங்களுக்கு எதிராக அவைகள் எந்தத் தீங்கும் செய்யாது. நீங்கள் அந்த இடத்தை எனக்குக் காட்டுங்கள்**" என்று அவர்களிடம் கூறினார்கள். அந்த ஜனங்கள் ஐயா அவர்களைக் காத்திருக்கும்படிச் சொல்லி விட்டுச் சென்று விட்டார்கள். ஆனால் திரும்பி வரவேயில்லை.

மறுநாள் ஐயா அவர்கள் அந்த ஜனங்களை அழைக்க சென்றார்கள். அதற்கு அவர்கள், "**நீங்கள் எங்களிடம் வந்துள்ளீர்கள், நாங்கள் உமக்கு அதிக உதவிகள் செய்வோம்**" என்றார்கள். பின்பு ஒரு மலைவாழ் மனிதனின் மனைவி தன் புருஷனை அழைத்து, "**அவர்களை அந்த இடத்துக்கு அழைத்துக் கொண்டு போகவும்**" என்றாள். பின்பு மூன்று மலைவாழ் மனிதர்கள் குண்டுகள் நிரப்பப்பட்ட இரண்டு

துப்பாக்கியுடனும், மரங்களை வெட்டப் பயன்படுத்தும் நீண்ட கைப்பிடியையுடைய ஒரு பெரிய கத்தியுடனும் வந்தனர். ஐயா அவர்கள் முந்தின நாள் எதுவும் சாப்பிடாததால் பசியுடன் அவர்களுடன் சென்றார்கள். போகும் வழியில், தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கு வசதியாக வழியைச் சுலபமாகக் கண்டு பிடிக்கும்படி மரங்களின் பட்டைகளை வெட்டினார்கள். அங்குள்ள கொடிய விஷம் நிறைந்த ஊரும் பிராணிகள், கொடிய விலங்குகள் குறித்து அதிகமாகப் பயப்பட்டு அங்குமிங்கும், மேலும்கீழும், முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டே வந்தார்கள். மேலும் குறிப்பிட்ட அந்த இடத்திற்கு வந்ததும், **"சாமி இங்கு கருங்சாத்தி, புலி மற்றும் பல உண்டு; எங்களோடு வந்து விடுகிறீர்களா?"** என்று அவர்கள் கேட்டனர். ஆனால் ஐயா அவர்கள் அவர்களிடம், **"நான் உங்களுடன் வரவில்லை. நான் இங்கு தங்கப் போகிறேன். அவைகள் எனக்கு எதிராக எந்தத் தீங்கும் செய்யாது"** என்றார்கள். பின்பு அந்த மனிதர்கள், **"நீங்கள் திரும்பி வரும்போது பட்டைகள் வெட்டப்பட்டுள்ள மரங்களைப் பார்த்து அந்த வழியாக வந்து விடுங்கள்"** என்றனர். அந்த இடம் அடர்ந்த வனமாகையால் அங்கே சூரிய ஒளியே இல்லை. ஒரே இருளாக இருந்தது. பட்டைகள் வெட்டிய மரங்களைப் பார்க்க வேண்டுமானால் அவைகளைத் தடவித் தான் பார்க்க வேண்டும்.

ஐயா அவர்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு மிக அருகில் ஒரு பாறை இருந்தது. அந்தப் பாறையிலிருந்து ஊற்றுநீர் சிறிதளவு ஊறிக் கொண்டிருந்தது. மரங்களின் இலைகள் அந்த ஓடையில் தொடர்ந்து விழுந்து கொண்டிருந்ததால் இலைகள் அழுகி தண்ணீர் கெட்ட நிலையில் காணப்பட்டது. அவர்கள் அந்த நீரை எடுத்துக் குடித்தார்கள். நன்கு வளர்ந்த புற்கள் அந்த இடத்தில் காணப்பட்டது. அவர்கள் அந்தப் புற்களைப் பிடுங்கி அகற்றினார்கள். பின்பு அந்த இடத்தை இலைகளால் நிரப்பி அதிலிருந்து ஜெபம்பண்ணினார்கள். அந்த இடத்திற்கு மிக அருகில்

உயர்ந்த பாறை ஒன்று இருந்தது. அவர்கள் அந்தப் பாறையின் மீது ஏறிச் சுற்றிலும் பார்த்தார்கள். அங்கு சந்தடி, இரைச்சல் மற்றும் இருள் காணப்பட்டது. ஆனால் சூரிய ஒளியே இல்லை. பின்பு ஐயா அவர்கள் அந்தப் பாறையின் மீது நின்று கொண்டு உரத்த சத்தமாய், "**அப்பா, அப்பா; இயேசுவே, இயேசுவே; என் தகப்பனே, என் தகப்பனே; என் தேவனே, என் தேவனே**" என்று கூப்பிட்டு கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணினார்கள்.

மலவிளையிலிருந்து ஐயா அவர்கள் அந்த இடத்திற்கு வந்தபோது அவர்களுடைய உடன் ஊழியர்கள் உண்ணாமலும், குளிக்காமலும், தலைக்கு எண்ணெய் வைக்காமலுமிருந்து கர்த்தரை நோக்கி உடனடியாக ஐயா அவர்களைத் திரும்ப மலவிளைக்கு அனுப்ப வேண்டுமென்று மிகவும் வருந்திக் கெஞ்சினார்கள். பின்பு கர்த்தர் ஐயா அவர்களுடைய முதுகில் ஒரு நுள்ளு கொடுத்து அவர்களிடம், "**உடனடியாக இவ்விடத்திலிருந்து போ**" என்று கூறினார். உடனே அவர்கள் கர்த்தருடைய நுள்ளினால் ஏற்பட்ட மிகுந்த வலியினிமித்தம் அந்த இடத்தை விட்டு மிகவும் அவசரமாகத் திரும்பினார்கள்.

ஆனால் இருளினால் பட்டைகள் வெட்டப்பட்டிருந்த மரங்கள் மூடப்பட்டிருந்ததால் அவர்களால் பாதையைக் கண்டுபிடிக்க இயலவில்லை. இரண்டு மூன்று மரங்களைக் கண்டார்கள். ஆனால் சரியான வழியைக் கண்டுபிடிக்க இயலவில்லை. ஆகவே, அவர்கள் அந்த இடத்தில் நின்று கொண்டு கர்த்தரை நோக்கி, "**இந்த வனத்தில் அலைந்து திரிவது உமக்குச் சித்தமானால், உமது சித்தப்படி ஆகட்டும் அல்லது மலவிளைக்குத் திரும்பிச் செல்வது உமக்குச் சித்தமானால் உமது சித்தப்படி ஆகட்டும்**" என்று விண்ணப்பம் பண்ணினார்கள். உடனே கர்த்தருடைய வல்லமையும் பெலனும் அவர்களுக்குள் வந்தது. உடனே மிக வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு கால்களில்

குத்தும் முள்ளுகளைக் குறித்தோ அல்லது சரீரத்தின் அவயவங்களில் குத்துவதைக் குறித்தோ அல்லது ஊரும் பிராணிகள் உண்டாக்கும் தடைகளைக் குறித்தோ அல்லது காட்டுச் செடிகள், மரங்களால் வரும் தடைகளைக் குறித்தோ மற்றும் வேறு எந்தவிதத் தடைகளைக் குறித்தும் எந்த சிந்னையும் இல்லை. அவர்கள் மிகவும் பசியாயிருந்தார்கள். ஒரு மலைவாசியின் வீட்டின் அருகே வந்தபோது, ஒரு மலைவாசிப் பெண் சமைத்த விளையாத பலாச் சுளைகளை வைத்துக் கொண்டு இருந்தாள். அவர்கள் அதைப் பார்த்து மரவள்ளிக் கிழங்கு என்று நினைத்தார்கள். அவர்கள் அவளுடைய வீட்டின் அருகே சென்று அவளிடம், **"சாப்பிடுவதற்கு எதாவது இருக்கிறதா? எனக்குக் கொஞ்சம் கொடு. பணம் தருகிறேன்"** என்றார்கள். அவள், **"எதுவும் இங்கு இல்லை"** என்றாள். பசி தாங்க முடியாமல் மீண்டும் அவளிடம் கேட்டார்கள். சமைத்த விளையாத பலா சுளையைக் குறித்துச் சொல்லி ஒரு அழுக்கான பெட்டியில் கொஞ்சம் சமைத்த பழச் சுளையுடன் மிளகாய் வற்றல்தூளும் கொண்டு வந்து கொடுத்தாள். அவர்கள் அவளிடமிருந்து அதை வாங்கிச் சாப்பிட்டார்கள். மேலும் அவள் குடிப்பதற்கு பச்சைத் தண்ணீரும் கொடுத்தாள். அவர்கள் அந்த தண்ணீரைக் குடித்தார்கள். பின்பு அவளுக்கு பணம் கொடுத்தார்கள். ஆனால் அவள் பிடிவாதமாக வாங்க மறுத்துவிட்டாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

பின்பு ஐயா அவர்கள் அந்த இடத்திலிருந்து மலவிளைக்குப் புறப்பட்டார்கள். அவர்களுடைய பிரயாணம் முழுவதிலும் அவர்கள் எந்தவிதமான விஷமுள்ள ஊரும் பிராணிகளையோ அல்லது கொடிய வனவிலங்குகளையோ காணவில்லை. எதுவுமே அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை. மிகவும் சந்தோஷத்துடன் மலவிளைக்கு வந்து சேர்ந்தார்கள். அநேக நாட்கள் அங்கு தங்கி ஜெபம்பண்ண வேண்டும் என்ற எண்ணத்துடன் அங்கே சென்றார்கள். ஆனால் சில நாட்களுக்குள்

அவர்களைக் கர்த்தர் திரும்ப மலவிளைக்கு அனுப்பினார். அவர்கள் பத்திரமாக மலவிளைக்கு வந்து சேர்ந்தார்கள். எல்லாக் காரியங்களிலும் கர்த்தர் அவர்களை விசேஷமாகப் பாதுகாத்தார். தேவனுக்கே மகிமை!

## 1.27 ஐயா அவர்கள் வேளிமலை என்ற மலைப்பாங்கான பகுதிக்கு இரண்டுமுறை ஜெபம் பண்ணும்படி சென்றது

ஐயா அவர்கள் இரண்டுமுறை, வேளிமலை என்ற மலைப்பாங்கான பகுதிக்கு ஜெபம் பண்ணும்படி சென்றார்கள். முதல்முறை அவர்கள் தனிமையாகவும், இரண்டாம் முறை ஒரு உடன் ஊழியருடனும் சென்றார்கள். முதல் முறையாக வேளிமலைக்குச் சென்ற போது நாகர்கோவிலிருந்து கொஞ்சம் சீனி, பாசிப் பயறு, தேயிலை, சமைப்பதற்குச் சில பாத்திரங்கள் வாங்கிக் கொண்டு சென்றார்கள். மலையேறியதால் உண்டான மிகுந்த களைப்பும் மற்றும் பசியின் காரணமாக ஜெபிக்க ஆரம்பிக்குமுன் கொஞ்சம் தேநீர் குடிக்கலாம் என்று நினைத்தார்கள். அதனால் சில விறகுகளைப் பொறுக்கினார்கள்; கொஞ்சம் தண்ணீர் எடுத்தார்கள். விறகு பொறுக்கிக் கொண்டிருக்கும்போது தான் விறகு பொறுக்குவதை நினைத்து அழுதார்கள். எவ்வளவு தேயிலை தண்ணீரில் போட வேண்டுமென்று தெரியாமல் கொஞ்சம் தேயிலையைத் தண்ணீரில் போட்டார்கள். ஆனால் அந்தத் தேநீர் மிகவும் கசப்பாக இருந்தது. அந்தக் கசப்பை மாற்றக் கொஞ்சம் சீனியைச் சேர்த்தார்கள். ஆனால் அது கசப்பை மாற்றாமல் அதன் ருசியை மிகவும் மோசமாக்கியது. எப்படியும் அந்தத் தேநீரைக் குடித்துக் கொண்டு ஜெபம்பண்ணச் சென்றார்கள்.

அவர்களுடைய படுக்கை விரிப்பை விரித்து அதன் மேல் முழங்கால்படியிட்டு ஐந்து நிமிடங்கள் ஜெபம் பண்ணினார்கள். **அவர்கள் கர்த்தரை நோக்கி அழுது**

**ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தபோது ஒரு அதிக பிரகாசமுள்ள ஒளி பிரகாசித்தது. அந்த நேரத்தில், அந்த இடத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவாகிய தேவன் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி, தம்மை அவர்களுக்குக் காண்பித்தார். கர்த்தர் ஐயா அவர்களைத் தமது மகா பரிசுத்த மார்போடு அணைத்துக் கொண்டு, தமது மகா பரிசுத்தமானத் தோளின் மீது போட்டுக் கொண்டு தம்முடைய மிகவும் பரிசுத்தமான கரங்களால் அவர்களது முதுகைத் தடவிக் கொடுத்தார். ஆறுதல்படுத்தி அவர்களிடம், "மகனே, பயப்படாதே! நான் உன்னுடனே இருக்கிறேன்! கலங்காதே! திகையாதே!" என்று ஆறுதல்படுத்தினார். மேலும் பல விசேஷித்த வாக்குத்தத்தங்களையும் அவர்களுக்குக் கொடுத்தார்.** அவருடைய மகா பரிசுத்தத் தோளில் இருக்கும் போது ஐயா அவர்கள் தேவனுடைய மகா பரிசுத்த வயிறு அளவுதான் இருந்தார்கள். அவர் அவ்வளவாக உருவத்தில் பெரியவராக இருந்தார். தேவனுக்கே மகிமை! ஐயா அவர்கள் கர்த்தருடைய அன்பும், சந்தோஷமுமான அந்தத் தரிசனத்தை நினைத்து சந்தோஷத்துடன் அழுதார்கள். அப்போது அங்கே அவர்கள் மட்டுமே இருந்தார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

பின்பு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஜெபம்பண்ண விரும்பி அவர்ளுடைய படுக்கை விரிப்பை விரித்தார்கள். ஆனால் அந்த இடம் அனுதின உணவுக்காகத் தன்னுடைய இருப்பிடம் வரைக்கும் செல்லும் ஒரு பாம்பின் பாதையாக இருந்தது. ஐயா அவர்கள் அந்த பாம்பு செல்லும் பாதையை புற்களாலும் கல்லாலும் அடைத்தார்கள். பாம்பு வந்தால், புற்கள் விழும் சத்தம் கேட்டு பாம்பு வருவதை அறிந்து கொள்ளலாம் என்று நினைத்து அவர்களுடைய படுக்கை விரிப்பை விரித்து ஜெபம் பண்ணத் தொடங்கினார்கள். ஆனால் அந்த நாள் அந்தப் பாம்பு அந்த வழியாக வரவில்லை. மறுநாள் அந்தப் பாதையில் அசுத்தமான இடங்களில் வாழும்

ஒரு வகையான அட்டை வந்தது. அது அவர்களுடைய படுக்கை விரிப்பின் மேல் வந்துவிடும் என்ற நினைவில், படுக்கை விரிப்பின் மேல் வந்தால் அதைச் சுத்தம் பண்ணுவதற்கு போதுமான சுத்த நீர் இல்லை. ஏனெனில் அருகில் கொஞ்சம் அசுத்த நீர் தான் இருந்தது. ஒரு மரக்குச்சியினால் அதைக் கொன்றால் கைகளைக் கழுவ வேண்டியதாயிருக்கும் என்றும் நினைத்தார்கள். இத்தகைய நினைவுகளுடன் அவர்கள் அங்கு உட்கார்ந்திருக்கும் போது, அந்த அட்டை படுக்கை விரிப்பு வந்தடையுமுன்பே திரும்பிச் சென்று விட்டது. உடனடியாகக் கர்த்தர் ஐயா அவர்களிடம், **"மகனே, அந்த அட்டை திரும்பிச் சென்றது போல அந்தப் பாம்பும் திரும்பிச் சென்று விட்டது. அந்தப் பாம்பை நான் வேறுவழியாக அனுப்பி விட்டேன். அது தன் உணவைத் தேடிச் சென்று, தன்னுடைய இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்று விட்டது. உனக்கு எந்த இடையூறும் கொடுக்காதபடிக்கு நானே இதைச் செய்தேன். நீ இந்த இடத்தை விட்டுப் போகும்வரை அது இந்தப் பாதையில் வராது"** என்று பேசினார். நம்முடைய தேவனுடைய அன்பான அநுகூலம் எப்படிப்பட்டது!

இரண்டாவது தடவை ஐயா அவர்கள் வேளிமலைக்குச் சென்ற போது தன் உடன் ஊழியர் ஒருவருடன் சென்றார்கள். அவர்கள் அங்கு சென்று ஜெபம்பண்ண ஆரம்பித்தார்கள். அவர்கள் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்த போது மூன்று மனிதர்கள் அங்கு வந்தனர். அவர்களுடைய பொருட்களைப் பார்த்து விட்டுச் சென்றனர். அவர்களிடம் அவர்களுடைய பரிசுத்த வேதாகமங்களும், பைக்கடிகாரம் ஒன்றும், 7 ரூபாயும் இருந்தன. பகல் வேளையில் இரண்டு கொள்ளையர்கள் வந்து, அந்த இடத்தைப் பார்த்து விட்டுச் சென்றுவிட்டனர். இரவு வேளையில் ஆறு அல்லது ஏழு கொள்ளையர்கள் அங்கு வந்தனர். அப்போது ஐயாவும் உடன் ஊழியரும் பாட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு பாட்டைப் பாடிக் கொண்டிருந்தனர். அப்போது அந்தத் திருடர்கள் அவர்களிடம் வந்து, **"இங்கே இருக்கும் நீங்கள் யார்? இங்கு எதற்காக**

**வந்தீர்கள்?"** என்று கேட்டனர். அதற்கு அவர்கள், **"நாங்கள் ஜெபம்பண்ண வந்துள்ளோம்"** என்றார்கள். பிறகு அந்தக் கொள்ளையர்கள் அவர்களிடம் அநேகக் கேள்விகளைக் கேட்டனர். ஆனால் அவர்கள், **"நான் பாடிக் கொண்டிருக்கும் போது, ஏன் அவர்களிடம் பேச வேண்டும்?"** என்று நினைத்தார்கள். ஆகவே அவர்கள் மீண்டும் பாட ஆரம்பித்தார்கள். **அவர்கள் பாட ஆரம்பித்தவுடன், பயங்கர தீயின் உஷ்ணம் தாக்கியது போல உணர்ந்து மிக விரைவாக அந்தக் கொள்ளையர்கள் அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டார்கள். அந்த இடத்திலும் கூடக் கர்த்தர் தம்முடைய பெரிய, அதிசயமான கிரியையைச் செய்தார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! அந்தத் திருடர்கள் தங்களுக்கு மிகப் பெரிய அளவு பணம் கிடைத்து விட்டது என்ற எண்ணத்தோடு அந்த இடத்திற்கு வந்தார்கள். அந்த இடத்தில் கூடக் கர்த்தர் இருவரையும் அதிசயமான பிரகாரமாய்க் காப்பாற்றினார். தேவனுக்கே மகிமை!

## 1.28 தேவனுடைய ராஜ்யமாகிய பரலோக ராஜ்யத்தைக் குறித்த மகா மகிமையான தரிசனமும், நியாயத்தீர்ப்பு மற்றும் அக்கினியும் கந்தகமும் சேர்ந்து எரிகிற அக்கினிக் கடலாகிய நரகத்தைக் குறித்தும் ஐயா அவர்களுக்கு உண்டான மாபெரும் தரிசனம்

தேவனுடைய ராஜ்யமாகிய பரலோக ராஜ்யம் எவ்வளவு சந்தோஷமானது, ஆசீர்வாதமானது மற்றும் மகிமையானது என்று நம்முடைய தேவனாகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்களுக்குக் காண்பித்தார். முன்பு, ஒருமுறை கர்த்தர் அவர்களிடம் தேவனுடைய ராஜ்யமாகிய பரலோக ராஜ்யத்தைப் படமாக வரையச் சொல்லியிருந்தார். அவர்கள் வரைந்தார்கள்; முழு மதிப்பெண்களைப் பெற்றார்கள். தேவனுக்கே மகிமை!

அதுவுமன்றி கர்த்தராகிய தேவன் பாவிகளுக்கு நியாயத்தீர்ப்பும், நரகத்தீயும், அக்கினியும் கந்தகமும் சேர்ந்து எரிகிற அக்கினிக் கடலாகிய நரகம் எவ்வளவு பயங்கரமானது என்பதையும் அவர்களுக்கு காண்பித்தார். மேலும் நம்முடைய தேவனாகிய கர்த்தர், மிகவும் அகோரமான நரகத்தில் தள்ளப்படப் போகிற பாவிகளின் பரிதாபகரமான நிலைமையையும் ஐயா அவர்களுக்குக் காண்பித்தார்.

நியாயத்தீர்ப்பின்போது பாவிகள் மிகுந்த தாங்கக்கூடாத, இருதயம் பிளர்க்கக் கூடிய அழுகையுடனும், பயத்தினால் தள்ளாடிக் கொண்டும் நடுநடுங்கிக் கொண்டும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவக்கு முன்பாக நிற்பார்கள். பின்பு, நரகத்தைப் பார்த்தவுடன், அவர்களுடைய மிகுந்த தாங்கக் கூடாத இருதயம் பிளர்க்கக் கூடிய அழுகையும், பயத்தினால் தள்ளாட்டமும், நடுக்கமும் மிக மிக அதிகரிக்கும். பின்பு, நரகத்திற்கு அருகில் செல்லும் போது அவர்களுடைய மிகுந்த தாங்கக் கூடாத இருதயம் பிளர்ந்த அழுகையும், பயத்தினாலுண்டான தள்ளாட்டமும் நடுக்கமும் அதிகமதிகமாய் அதிகரிக்கும். ஏனெனில் அகோரமான நரகத்தீ பாவிகளை நோக்கி, அவர்களை பட்சிக்கும்படி மிகப் பயங்கரமாக, மிக உயரமாக, பலமாக நிலையான அக்கினி ஜூவாலையாக வந்து கொண்டிருக்கும். எவ்வளவு பரிதாபமான காரியம் இது!

**பரலோகராஜ்யம், நரகம், பாவிகளுக்கு நியாயத்தீர்ப்பு இவைகளைக் குறித்து உலகத்திலுள்ள ஜனங்களுக்கு சாட்சியாக அறிவிக்கும் படியாகவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, ஐயா அவர்களுக்கு இவைகளைக் காண்பித்தார்.** தேவனுக்கே மகிமை!

## 1.29 ஐயா அவர்கள் பரதீசைக் குறித்து கண்ட ஒரு மகிமையான தரிசனம்

ஒருமுறை ஐயா அவர்கள் நமது சபையின் ஒரு விசுவாசியின் மரணத்தைக் குறித்து மிகுந்த கவலையோடு இருந்தபோது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இரட்சிக்கப்பட்ட, விடுதலையாக்கப்பட்ட, மறுபிறப்படைந்த, பரிசுத்தவான்கள், விசுவாசிகளின் ஆத்துமாக்கள் தங்கி இளைப்பாறும் இடமாகிய, ஆசீர்வதிக்கப்பட்ட, பரிசுத்தமான பரதீசை ஐயா அவர்களுக்குக் காண்பித்தார்.

பின்பு கர்த்தர் அவர்களிடம், "**பரதீசைப் பார்" என்றார். உடனே அவர்கள் பார்த்தார்கள். அந்த விசுவாசி மிகுந்த மகிழ்ச்சியோடு, மிகுந்த சந்தோஷத்தோடு சிரித்து, சிரித்து தொடர்ந்து அடக்கக்கூடாத சிரிப்போடு சிரித்துக் கொண்டேயிருப்பதைக் கண்டார்கள். எவ்வளவு சந்தோஷமான சிரிப்பு இது! பரதீசில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் இப்படி இருக்குமானால் தேவனுடைய ராஜ்யமாகிய, பரலோக ராஜ்யத்தில் எவ்வளவு மகிழ்ச்சியும், சந்தோஷமுமாக இருக்கும்! எவ்வளவு மகிழ்ச்சியும், சந்தோஷமுமான இடம் இது!**

## 1.30 ஐயா அவர்களின் போதகப் பயிற்சிக் கல்லூரிப் படிப்பு

சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் போகதப் பயிற்சிக் கல்லூரியில் ஒரு மாணவராக இருந்தார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய சபையைக் குறித்தும், அவருடைய பல்வகை ஊழிய வகுப்பினரைக் குறித்தும், அவர்களுடைய வரங்களைக் குறித்தும், வெவ்வேறு ஆராதனைகளைக் குறித்தும், வெவ்வேறு ஆராதனைகளை நடத்துவதைக் குறித்தும் கர்த்தரைப் புகழ்ந்து பாடல்கள், சங்கீதங்கள் எழுதுவதைக் குறித்தும், பரிசுத்த வேத புத்தகத்திலுள்ள அவருடைய இரகசியங்கள் / மறைபொருட்கள் மற்றும் பரிசுத்த வேத வாக்கியங்களைக் குறித்தும் கற்றுக் கொடுத்த ஒரே ஆசிரியர்

அல்லது தேர்ச்சி பெற்றவர் – பரிசுத்த தேவனுடைய வார்த்தையே. தேவனுடைய பரிசுத்த வார்த்தை என்பது தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மட்டுமே. ஐயா அவர்களுடைய தொடர்ச்சியான கடின உபவாசங்களின் போது, கர்த்தர் இவைகளையெல்லாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அவரிடமிருந்து மிகக் கவனமாகக் கற்றுக் கொண்டார்கள்.

அவர்கள் கற்றுக் கொண்ட வகுப்பறை முன்பு கற்றுக்கொண்ட மாணவர்கள் சிந்திய / சிதறிய இரத்தத்தால் நிறைந்திருந்தது. அவர்களும் அந்த வகுப்பறையில் அவர்களுடைய இரத்தத்தைச் சிந்திக் கற்றார்கள். பவுல் அப்போஸ்தலரைப் போல (கலாத்தியர் 1 : 11, 12) அவரிடமிருந்து கற்றுக்கொண்டு, அவர் நடத்திய தேர்வுகள் / பரீட்சைகளில் 100 % மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றார்கள். தேவனுக்கே மகிமை!

## 1.31 ஐயா அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து சான்றிதழ் பெற்றது

ஐயா அவர்கள், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நடத்திய தேர்வுகள் / பரீட்சைகளிலெல்லாம் தேர்ச்சி பெற்றபின் பரலோகத்தின் எஜமானராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து சான்றிதழ் பெறும்படியாகச் சென்றார்கள். அப்படிச் சான்றிதழ் வாங்கச் செல்லும் போது, வழியில் வந்தத் தடைகள், இடையூறுகளையெல்லாம் குதித்துக் குதித்து தங்களுடைய குறிக்கோள் தவறாமல், செல்ல வேண்டிய இடத்திற்கு மிக அருகில் வந்தார்கள். அங்கு ஒரு பெரிய செங்குத்தான இடம் இருந்தது. பிடிப்பதற்குக் கைப்பிடி எதுவும் கிடையாது. கீழே கால் ஊன்ற படிக்கட்டுகளும் கிடையாது. அங்கும் அவர்கள் தங்களுடைய குறிக்கோள் தவறாமல் குதித்துக் குதித்துச் சென்றார்கள். திடீரென்று

உயரேயிருந்து வல்லமை அவருக்குள் வந்து அவரைக் கஷ்டமில்லாமல் உயரே கொண்டு சென்றது. தேவனுக்கே மகிமை!

அவர்கள் மேலே சென்றபோது எண்ணற்ற பாதுகாப்பு இடுகைகளையும், பாதுகாவலர்களையும் கண்டார்கள். பின்பு அந்தப் பாதுகாப்பு இடுகைகளின் வழியாகச் சென்றார்கள். அவர்களுடைய பரலோகின் எஜமானாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகிமையாக வீற்றிருக்கும் இடத்திற்குள் நுழைய இரண்டு பாதுகாப்பு இடுகைகளைக் கண்டார்கள். அப்போது ஒன்று அவர்களிடம், **"இது மற்ற அப்போஸ்தலர்களுக்கான பாதுகாப்பு இடுகை; அது முதன்மையான அப்போஸ்தலருக்குரிய (மற்ற அப்போஸ்தலர்களுக்குத் தலைவர்) பாதுகாப்பு இடுகை. நீங்கள் அந்த வழியாகச் செல்லுங்கள்**" என்றது. பின்பு அவர்களுடைய பரலோகின் எஜமானராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகிமையாக வீற்றிருக்கும் இடத்திற்குள் முதன்மையான அப்போஸ்தலருக்குரிய பாதுகாப்பு இடுகை வழியாகச் சென்றார்கள். அப்பொழுது மகிழ்ச்சியான புன்சிரிப்புடன் அவர்களுடைய பரலோகின் எஜமானராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்களுக்குச் சான்றிதழைத் தந்து, "**நீ மூன்று பேருடைய வேலையைச் செய்ய வேண்டும்**" என்றார். மிகுந்த தாழ்மையுடனும், பயத்துடனும் ஐயா அவர்கள் அவர்களுடைய *பரலோகின் எஜமானராகிய ஒரே தேவனும், ஒன்றான மெய்த் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து* தேவன் கொடுத்த தேவனுடைய ஊழியத்தைச் செய்யும்படிக்குச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

## 1.32 யார் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தில் அவருடைய வலது பாரிசத்தில் உட்காரப் போகிறார்கள்?

*"அப்பொழுது, செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடு கூட அவரிடத்தில் வந்து, அவரைப் பணிந்து கொண்டு: உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றாள்.*

*அவர் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்: உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்ய வேண்டும் என்றாள்.*

*இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள்.*

*அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்."* *மத்தேயு 20 : 20 - 23*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையின் பாத்திரத்தில் பானம் பண்ணின ஒருவர், அவருடைய பாடுகளின் பாத்திரத்தில் அவருக்கு அடுத்தபடியாகபு பாடுபட்ட ஒருவர், அவருடைய ராஜ்யத்தில் அவருடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் உட்காருவார். அந்த நபருக்கு அடுத்தபடியாக ஆண்டவருடைய

பாடுகளாகிய பாத்திரத்தில் பாடுபட்ட ஒருவர் அவருடைய சிங்காசனத்தின் இடது பாரிசத்தில் உட்காருவார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! அவருடைய ராஜ்யத்தில் சிங்காசனத்தில் உட்காருவதற்கு நாம் அவருடைய பாடுகளின் பாத்திரத்தில் பாடுபட ஆயத்தமாயிருக்க வேண்டும். இங்கு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவருடைய ராஜ்யமாகிய பரலோகத்தில் பிரவேசிப்பதற்குரிய வழியைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

*"...... நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்"* அப்போஸ்தலர் 14 : 22

ஆண்டவராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக அவருடைய சிலுவையின் பாத்திரத்தில் பானம்பண்ணி அவருடைய பாடுகளின் பாத்திரத்தில் பாடுபட்டவர் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள். சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுக்கு அடுத்தபடியாகப் பாடுகளின் பாத்திரத்தில் பாடுபட்டவர் முதல் நூற்றாண்டு கால அப்போஸ்தலராகிய பவுல். ஆகவே அவருடைய ராஜ்யத்தில் அவருடைய சிங்காசனத்திற்கு வலது பாரிசத்தில் உட்காரப் போகிறவர் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள். அவருடைய ராஜ்யத்தில் அவருடைய சிங்காசனத்திற்கு இடது பாரிசத்தில் உட்காரப் போகிறவர் பவுல் அப்போஸ்தலர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா! நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்களுக்கு இந்த இரகசியத்தை / மறைபொருளை வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுக்கே மகிமை!

ஒருமுறை தரிசனத்தில் பவுல் அப்போஸ்தலர் ஐயா அவர்களைச் சந்தித்து மிகுந்த கவலையுடன் அவர்களிடம், **"நீங்கள் படுகிற பாடுகளின் அளவு நான் பாடுபடவில்லை"** என்று சொன்னார். ஒருமுறை நம்முடைய கர்த்தர் ஐயா அவர்களைக் குறித்து தீர்க்கதரிசனத்தில் **"என் மகன், இன்னும் பாடுகள், இன்னும்**

**பாடுகள், இன்னும் பாடுகள் என்று முன்னேறிக் கொண்டிருக்கிறான்"** என்று சொன்னார்.

## 1.33 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுக்குக் கொடுத்துள்ள கீழ்க்கண்ட வாக்குத்தத்தங்கள்

*"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்"* *எரேமியா 33 : 3*

*"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்."* *எரேமியா 1 : 5*

*"கிழக்கிலிருந்து நீதிமானை எழுப்பி, தமது பாதபடியிலே வரவழைத்தவர் யார்? ஜாதிகளை அவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவனை ராஜாக்களுக்கு ஆண்டவனாக்கி, அவர்களை அவன் பட்டயத்துக்குத் தூசியும், அவன் வில்லுக்குச் சிதறடிக்கப்பட்ட தாளடியுமாக்கி"* *ஏசாயா 41 : 2*

*"உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனை தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்."* *ஏசாயா 46 : 11*

*"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ*

*குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்."* *ஏசாயா 54 : 17*

*"எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.*

*இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.*

*உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்து வருவார்கள்.*

*சுற்றிலும் உன் கண்களை ஏறெடுத்துப்பார்; அவர்கள் எல்லாரும் ஏகமாய்க்கூடி உன்னிடத்திற்கு வருகிறார்கள்; உன் குமாரர் தூரத்திலிருந்து வந்து, உன் குமாரத்திகள் உன் பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள்.*

*அப்பொழுது நீ அதைக் கண்டு ஓடிவருவாய்; உன் இருதயம் அதிசயப்பட்டுப் பூரிக்கும்; கடற்கரையின் திரளான கூட்டம் உன் வசமாகத் திரும்பும், ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்துக்கு வரும்."* *ஏசாயா 60 : 1 - 5*

## 1.34 கர்த்தருடைய சபையையும் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களையும் குறித்த்தான சில முக்கியமான தீர்க்கதரிசனங்கள்

*"கர்த்தருடைய சபை; கர்த்தருடைய சபை; கர்த்தருடைய சபை இது."*

*"என் சபையை நான் அறிந்திருக்கிறேன். என் சபைக்கு அவசியமானதை அறிந்திருக்கிறேன். அவைகளை கொடுக்க நான் எப்போதும் சித்தமுள்ளவராயிருக்கிறேன்."*

*"இது என்னுடைய சபை என்பதை அறிந்து கொள்ளுங்கள்; இது என்னுடைய சபை, என்னுடைய திருசரீரமாகிய சபை."*

*"உலகத்துக்கு விளக்காக ஏற்படத்தப்பட்டவன். வெளிச்சமாக ஏற்படுத்தப்பட்டவன். உலகத்துக்காக. உலகம் முழுவதுக்குமாக."*

*"உலகம் முழுவதிலும் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்பண்ணும்படியாக எழுப்பப்பட்டவன் இவன். கடைசி காலத்துக்கு எழுப்பப்பட்டவன் இவன்."*

*இவன் யார்? கிறிஸ்துவின் ஸ்தானத்தில் ஏற்படுத்தப்பட்டவன்.*

*"இதோ வழிகாட்டி ஒருவன். இவன் தான், இவன் தான் வழிகாட்டி. ஏது வழி காட்டுகிறவன்? பரலோகத்தின் வழியை காட்டுகிறவன்."*

*"உலகம் இதோ நடுநடுங்கப்போகிறது. என்னுடையவன், என்னுடைய குமாரன், என்னுடைய உத்தமன், என்னுடைய நேச குமாரன், அன்பின் மகன் என்பதைக் குறித்து உலகம் இதோ காணவும், அறியவும் போகிறது. கர்த்தரைக் காணப்போகிறது உலகம். கர்த்தருடைய பயங்கரத்தை காணப்போகிறது உலகம். கர்த்தருடைய அதிசயத்தைக் காணப்போகிறது உலகம். அற்புதமான காரியங்களைக் காணப்போகிறது உலகம். இதோ கர்த்தருடைய பராக்கிரமத்தை காணப்போகிறது உலகம். உலகத்தை இதோ நியாயந்தீர்க்கிறவர் கர்த்தர் என்பதை உலகம் அறியப்போகிறது. இதோ உலகத்தை சிருஷ்டித்தவர், உலகத்தை அழிவினின்று விடுவிக்கும் படியாக உலகத்திலே இதோ வந்தவர், பாடுபட்டவர் என்பதை அறியப்போகிறது உலகம், என்னுடைய மகன் மூலம் இவைகளெல்லாம் நடக்கவேண்டியிருக்கிறது. என் மகன் மூலம் உலகம் இவையெல்லாம் காணப்போகிறது, அறியப்போகிறது.*

*"இவன் உலகத்துக்காக எழுப்பப்பட்டவன். என்னுடைய தாசன், அருமை தாசன், உத்தம தாசன், உண்மையுள்ள தாசன். யார் இன்றைக்கு உலகத்திலே?*

*இப்பேர்பட்ட ஒருவன், இல்லவே இல்லை என்பதை அறிந்துக் கொள்ளுங்கள். இவன் யார்? என்னுடைய பவுல். முதல் நூற்றாண்டு காலத்திலே காணப்பட்ட பவுலைப் பார்க்கிலும் விசேஷமாக எழுப்பப்பட்டவன். ஆத்துமாக்களை அழிவினின்று மீட்டு இரட்சிக்கும் படியாக, என்னுடைய சுவிசேஷத்தை உலகத்தில் அறிவிக்கும் பொருட்டாக இந்தக் கடைசி காலத்திலே என்னாலே எழுப்பப்பட்டு ஏற்படுத்தப்பட்டவன். என்னுடைய தாசனை நான் பல பாகத்திலும் வெளிப்படுத்திக் கொண்டே வருகிறேன். இவன் யார்? என் நேசமகன், என்னை நேசித்து உலகத்திலே வாழுகிறவன், என் அடிச்சுவடைத் தொடர்ந்து வருகிறவன்; என் திருவுளச் சித்தத்தை மாத்திரம் செய்கிறவன்; என்னுடைய சகலவற்றையும் வெளிப்படுத்தி அறிவிக்கிறவன். விடுதலையா? மீட்பா? பரிசுத்தமாகுதலா? என்னுடைய வார்த்தையுடைய சாரம் என்பதை அறிந்து கொள். என்னுடைய மகன் பேசுகிற வார்த்தைகளே அவைகள். உங்களை ஆசீர்வதிக்கும்படியாய் கடந்து வந்திருக்கிறேன். என்னை யார் விசுவாசிக்கிறார்கள்? யார் எனக்கு கீழ்ப்படிகிறார்கள், விசுவாசிக்கிறார்கள்? யார் ஆசீர்வாதத்தைக் குறித்ததான தாகத்தோடு, வாஞ்சையோடு காணப்படுகிறார்களோ அவர்கள் அளவில்லாமல் ஆசீர்வதிக்கப்படுவார்கள்."*

*"நான் ஒருவனைத் தேடினேன். எனக்குக் கீழ்ப்படிந்திருக்கிறவனை, என்னைப் பின்பற்றுகிறவனை, எனக்காக பாடுகள், கஷ்டங்களை சகிக்கிறவனை, ஜீவனை வெறுத்து எனக்காய் பாடுபடுகிறவனை, உலகத்துக்கு ஆசீர்வாதங்களை வருவிக்கும் தன்மையோடு பாடுபடுகிறவனை, என் வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்ற ஏதுவானவனாக கிரியை செய்கிறவனை, திறப்பு வாயிலில் நின்று கண்ணீரோடு விண்ணப்பம் பண்ணுகிறவனை, இராப்பகலாக எனக்காக, என் ஆத்துமாக்களுக்காக உருக்கத்தோடு கண்ணீர் விட்டு*

*புலம்புகிறவனை, தாங்கக்கூடாத வேதனையோடு பெருமூச்சுவிட்டு புலம்புகிறவனை, ஆத்துமாக்களின் அழிவைப் பார்த்து வேதனையோடு கண்ணீர் விட்டு புலம்புகிறவனை, உலகம் முழுவதிலும் தேடினேன். பரலோகத்திலிருந்து பூலோகத்தைக் கண்ணோக்கினேன். சகல மனுமக்களையும் கண்ணோக்கிப் பார்த்தேன். சகல ஜனங்களையும் நோக்கிப் பார்த்தேன். உள்ளிந்திரியங்களை ஆராய்ந்து சோதித்து பார்த்தேன். இந்த கடைசி காலத்திலே ஒருவனைக் கண்டேன். என்னுடைய மகன், ஒரே ஒருவனைக் கண்டேன். என்னுடைய மகனைக் கண்டேன், எனக்கு ஆறுதல் அளிக்கிறவனாகக் கிரியைச் செய்கிறவன். ஆத்துமாக்களுடைய அழிவைக் கண்டு, வேதனையோடு கண்ணீர் விட்டு, பெருமூச்சுவிட்டு வேண்டுதல் செய்கிறவன், ஜீவனை வெறுத்து, கண்ணீர் விட்டு, புலம்பி பாடுபடுகிறவன். என்னுடைய மகனைப் பார்க்கிறவர்கள் என்னைக் காண்பார்கள். உனக்கு ஏது கண்கள் திறக்கப்பட்ட அனுபவத்தோடு காணப்படுகிறாய்? என்பதை அறிந்து கொள். இவ்விதமாக என் சித்தம் செய்கிற ஒரு மகனை நீ பார்த்திருக்கிறாயா? கண்டிருக்கிறாயா? உன் மத்தியிலே உன்னிடத்திலே, உன்னோடு இடைபட்டுக் கொண்டிருக்கிறவனை நீ அறிந்திருக்கிறாயா? உனக்காக ஜீவனை வெறுத்துப் பாடுபட்டு கண்ணீர் விட்டு, புலம்புகிறவனை நீ விசுவாசிக்கிறாயா? உன் தகப்பனைப் பார்க்கிலும் நேசிக்கிறவனை நீ அறிந்திருக்கிறாயா? உனக்குடையவர்கள் எவரானாலும், எல்லாரைப் பார்க்கிலும் அதிகமாக சினேகித்து, நேசித்து உனக்காக பாடுபடுகிறவனை நீ விசுவாசித்திருக்கிறாயா? அனேகர் இன்னும் அறிந்து கொள்ளவில்லை, அறிந்து கொள்ளவில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையினால் அவர்கள் தங்களுக்கு வரும் ஆசீர்வாதத்தை தாங்களே தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் ஆசீர்வாத கரத்தை நீட்டி அவர்களை ஆசீர்வதிக்கும் படியாய் கடந்து வந்தும் அதற்கு தடையாக காணப்படுகிறார்கள். ஒரே ஒன்று தான், என்னுடைய மகனுடைய வார்த்தையை விசுவாசியாததே. என்*

*மகனுடைய ஆலோசனையை விசுவாசியாமல் காணப்படுகிறதே. என் மகனை இன்னும் அறியாமலும் இருக்கிறதே. ஒரே ஒரு வழிதான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஆசீர்வாதங்களை அடைந்து கொள்ள நான் அனேக ஆண்டுகளாக பேசிக் கொண்டிருக்கிறேன். அவைகளை விசுவாசிக்கிறர்கள் ஆசீர்வதிக்கப் படுவார்கள். விசுவாசியாதவர்கள் ஆசீர்வாதங்களை ஒருபோதும், பெற்றுக் கொள்ளமாட்டார்கள். நீ விசுவாசிப்பாயானால் ஆசீர்வதிக்கப்படுவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

## 1.35 ஐயா அவர்கள் புனித ஸ்தலத்தைப் பார்வையிட்டது

**இஸ்ரவேலிலுள்ள கர்த்தருடைய புனித ஸ்தலமாகிய எருசலேம் மற்றும் பரிசுத்த வேதாகமத்தின்படி முக்கியத்துவம் வாய்ந்த வேறு சில இடங்களையும் ஐயா அவர்கள் நேரில் கண்டு அவைகளை ஜனங்களுக்கு சாட்சியாக அறிவிக்கும்படி பார்வையிட்டார்கள்.** இயேசுகிறிஸ்து பிறந்த இடமாகிய பெத்லகேம், ஆண்டவர் பாடுபட்டு இரத்த வேர்வை சிந்தின கெத்செமெனே தோட்டம், தம்முடைய மகா பரிசுத்த இரத்தத்தைச் சிலுவையில் சிந்தி மரித்த கொல்கொதா மலை அல்லது கல்வாரி, கல்வாரி மலையில் சிலுவை மரம் தோண்டி நாட்டப்பட்டிருந்த குழி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் முதல் இந்நாள் வரை திறந்த நிலையிலுள்ள அவரது கல்லறை, ஒலிவ மலையில் இயேசுகிறிஸ்து 40 வது நாள் பரலோகத்திற்கு ஏறிச் சென்ற இடம், உயிர்த்தெழுந்த 50 வது நாளாகிய (கிரேக்கு மொழியில் அந்த நாள் பெந்தெகொஸ்தே நாள் எனப்படும்) பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கிய இடம், (இறந்து நான்கு நாட்களான லாசருவை உயிரோடெழுப்பிய திறந்த கல்லறை) (5 அப்பம் 2 மீன்களைக் கொண்டு 5000 பேருக்கு அதிகமானவர்களை போஷித்து 12 கூடைகள் நிறைய மீதி எடுத்த இடம்)

பரிசுத்த வேதாகமத்தோற் சுருள்கள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்ட இடம், சீயோன் மலைமீது கட்டப்பட்டிருந்த எருசலேம் தேவாலயத்தின் மேற்கு சுவர் அல்லது அழுகையின் சுவர் மற்றும் முக்கியமான இடங்களை நேரில் கண்டு மக்களுக்கு சாட்சியாக அறிவித்தார்கள். தேவனுக்கே மகிமை!

கர்த்தருடைய அப்போஸ்தலர்களாகிய பேதுரு, பவுல் கர்த்தருடைய இரத்த சாட்சிகளாக மரித்த ரோம் நகரத்தையும் பார்வையிட்டிருந்தார்கள்.

## 1.36 ஐயா அவர்கள் எருசலேமிலிருந்து வந்த பின்பு பேசினதான தீர்க்கதரிசனம்

*"உனக்கு மறைவானது ஒன்றுமில்லை. அதற்காக தெரிந்து கொண்டவன் நீ. உலகம் அனைத்துக்குமாக ஏற்படுத்தப்பட்டவன் நீ. உலகம் அனைத்துக்குமாக ஏற்படுத்தப்பட்டவன் நீ. இப்போது நீ ஆத்துமாக்களுடைய அழிவைக் குறித்து வேதனையோடு கண்ணீர் விடுகிறாய். என் மகனே! ஆத்துமாக்களை அழிவினின்று மீட்டு இரட்சித்து சொந்தமாக்குகிறதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர்விட காலம் கிட்டி வருகிறது. உனக்கு ஏராளமான வாக்குத்தத்தங்களை கட்டளையிட்டிருக்கிறேன். அவைகளை உனக்கு நினைவுறுத்தி, நினைவுபடுத்தி வருகிறேன். அவைகளின்படியே கிரியை செய்து வருகிறேன். நீ என்னுடைய உத்தம குமாரன் என்பதை உலகத்துக்கு வெளிப்படுத்த இதோ எழும்பியிருக்கிறேன். என்னை வெறுத்த ஜனங்கள் யூத ஜனங்கள். என்னை புறக்கணித்தவர்கள் யூத ஜனங்கள். வேத வாக்கியம் நிறைவேறக் காரணமாயிருந்து என்னை முழுதுமாய் வெறுத்தவர்கள் யூத ஜனங்கள். நீ போவதற்கு முன்னே அவர்களைக் குறித்து நான் உனக்கு என்ன பேசினேன்? உன்னை சிநேகித்ததை நீ பார்த்தாயல்லவா? உன்னை அவர்களுக்கு வெளிப்படுத்தினேன். உன்னைக் குறித்ததான சரியான அன்பு*

*அவர்களுக்குள்ளே பிரவேசித்ததுண்டு. அவர்களுக்காக நீ கண்ணீர் விட்டதை நான் கண்டேன்; என்னுடைய ஜனங்களுக்காக நீ கண்ணீர் விட்டாய்; பெருமூச்சு விட்டாய். எருசலேமிலிருந்து, என்னுடைய பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இந்த கண்ணீரின் பலன் இல்லாமல் ஒருபோதும் போவதில்லை என்பதை அறிந்துகொள். என்னுடைய ஜனங்கள், இஸ்ரவேலுக்கு அது ஆசீர்வாதமாக மாறியிருக்கிறது. உன் மூலம் அல்லவா வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேண்டியிருக்கிறது. நீ புறஜாதியானா? இல்லை, இல்லை. நீயே என்னுடைய சொந்த மகன்; உத்தம மகன்; உத்தம குமாரன்; உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன்; என்னுடைய ஸ்தானாபதியாகிய ஊழியக்காரன்; கடைசிகாலத்துடைய சகல வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்கென்று தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியக்காரனாகிய நீ. நீ எவைகளைக் காணப் போகிறாய் என்பதை அறிந்திருக்கிறாயா? எத்தனையோ தடவைகளில் அதை நான் உனக்கு பேசி அறிவித்தும், அதை காண்பித்தும் இருக்கிறேன். நீயே உண்மையான இஸ்ரவேலன். நீயே சரியான உண்மையான யூதன். என்னுடைய ஜனங்களைக் கொண்டல்லவா நான் சாட்சி கொடுத்தேன். எருசலேமிலிருந்த யூத ஜனங்களைக் கொண்டல்லவா? அவைகளும் என்னுடைய கிரியைகளில் ஒன்று என்பதை அறிந்துகொள் மற்றும் சகல ஜனங்களும் உன்னை நேசிக்கக் காரணம் என்ன? உன்னைக் கண்டவுடன் உணர்வு ஏற்படக் காரணம் என்ன? உன்னைக் கண்டு பணிந்து கொள்ளக் காரணம் என்ன? பணிந்த சிந்தையோடு உன்னோடு பேசக் காரணம் என்ன? உன்மேல் அன்பு கூரக் காரணம் என்ன? வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாகிய கிரியை என்பதை அறிந்துகொள். உலகம் முழுவதுக்குமாக எழுப்பப்பட்டவன் நீ."*

## 1.37 சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்து நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தமது புத்தகமாகிய பரிசுத்த வேதாகமத்தில் எழுதியிருக்கிறார்

ஒருமுறை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்து தீர்க்கதரிசனத்தில்,

"***உன்னைப் பற்றி நான் என் புத்தகத்தில் எழுதி வைத்துள்ளேன்***" என்று பேசினார்.

கீழ்க்கண்ட வசனங்களில் *யோவான் 14 : 12 -14* ல் சாது G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்து அவருடைய புத்தகமாகிய பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டது. தேவனுக்கே மகிமை!

"***மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.***" *யோவான் 14 : 12 - 14*

மேலே கொடுக்கப்பட்டுள்ள வேதாகமத்திலுள்ள வசனங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் நிறைவேற்றப்பட உள்ளது. **இதுவும் தேவனுடைய மிகவும் முக்கியமான இரகசியங்கள், மறைபொருட்களுள் ஒன்று.** இந்த இரகசியம், தீர்க்கதரிசனம் நிறைவேறும் போது உலகம் முழுவதும் மாறும். உலகம் முழுவதும் தலைகீழாக மாறும்; உலகம் முழுவதும் நடுங்கும்; உலகம் முழுவதும் அதிரும்; எவ்வளவு அதிர்ச்சிக்குரிய, ஆச்சரியத்திற்குரிய, அற்புதமான காரியம் இது! இந்த வசனங்கள் நிறைவேற ஒவ்வொருவரும் இடைவிடாமல் மிகவும்

ஊக்கமாய் அசைவில்லாத நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு ஜெபம்பண்ண வேண்டும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

## 1.38 சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் மூலம் உண்டான கடைசி தீர்க்கதரிசனம்

1983 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ந் தேதி சபையின் பொதுக்கூட்டத்தில் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரை (மரணம்) அடைவதற்கு 10 நாட்களுக்கு முன்பாக நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஐயா அவர்களுடைய நித்திரை (மரணம்) யைக் குறித்தும், அவருடைய சபையின் ஊழியக்காரர்களுக்கும், விசுவாசிகளுக்கும் வரப்போகிற பயங்கரமான சூழ்நிலையைக் குறித்தும் கீழ்க்கண்டவாறு தெளிவாகக் கடைசி தீர்க்கதரிசனமாகப் பேசியிருந்தார்.

***"மேய்ப்பன் (சாது. G. தேவநேசன்) இல்லாத ஆடுகளைப் போல் சிதறடிக்கப்படப் போகிறீர்கள். மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல் அலையப் போகிறீர்கள். ஊழியக்காரர்களுடைய அநுபவத்தை அடையாவிட்டால் இதோ உங்களுக்கு ஆபத்து, அழிந்து போவீர்கள்."***

மேற்சொன்ன தீர்க்கதரிசனத்தின் ஒவ்வொரு வார்த்தையும் மாற்றமில்லாமல் இப்போது அவருடைய சபையில் நடந்து கொண்டிருக்கிறது. மேலும் கர்த்தர் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்து மேல் குறிப்பிட்டுள்ள தீர்க்கதரிசனத்தில் கீழ்க்கண்டவாறு பேசியிருந்தார்.

***"என் மகனல்லாமல், என் மகனாலே அல்லாமல், என் மகன் இல்லாமல் உலகத்திலே வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேறு யாருமில்லை."***

ஆகையால், தேவனுடைய விசுவாசமுள்ள ஊழியர்களாலும், விசுவாசிகளாலும் மற்றும் சிலராலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நிச்சயமாக அவருடைய வாக்குத்தத்தங்களை ஐயா அவர்களை மரணத்திலிருந்து எழுப்பி, உயிரடையச் செய்து அவர்கள் மூலமாக நிறைவேற்றுவார் என்று உறுதியாக நம்பப்படுகிறது. தேவனுக்கே மகிமை!

நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் செய்யக் கூடாத அதிசயமான ஆச்சரியமான காரியம் எதுவும் இல்லை.

*"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?"* *எரேமியா 32 : 27*

*மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்னார்.*

*"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை."* *மத்தேயு 24 : 35*

மேலும் பரிசுத்த வேதாகமம் சொல்கிறது,

*"கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்;"*

*1 பேதுரு 1 : 25*

## 1.39 சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தது

சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் 1983 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் தேதி தமது 68 வது வயதில் கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார்கள். **ஒரே, மெய் தேவனாகிய இயேசுகிறிஸ்துவை அவர்கள் தமது சொந்தக் கண்களால் கண்ட 20 ம் நூற்றாண்டின் மகிமையான சாட்சி. பேதுரு அப்போஸ்தலர் ஜனங்களுக்கு அறிவித்தது (*2 பேதுரு 1 : 16*) போல், ஐயா அவர்கள் ஜனங்களுக்கு கர்த்தராகிய**

**இயேசுகிறிஸ்துவின் வல்லமை, அதிகாரம், பரிசுத்த வருகையைக் குறித்து வெளிப்படுத்தி அறிவித்த மகிமையான தேவனுடைய சாட்சி.** தேவனுக்கே மகிமை!

*"நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையும், வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்."* *2 பேதுரு 1 : 16*

## 1.40 சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களைக் குறித்த சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களின் மகா பரிசுத்தமான விசுவாசமும் (நம்பிக்கை) ஜீவ நம்பிக்கையும்

நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வெளிப்படுத்தல்கள் நிச்சயமாக நடந்து நிறைவேறப் போகிறது. அவருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் ஏற்ற வேளையில் அவருடைய நியமிக்கப்பட்ட வேளையில் நிறைவேறும். (*ஆபகூக் 2 : 3*) **நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முந்திக் கொள்ளவோ அல்லது தாமதிக்கவோ மாட்டார். எப்போதும் ஏற்ற வேளையில் செய்வார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், அவருடைய மகிமையான அதிசயமான கிரியைகளும் அவருடைய ஊழியக்காரர்களின் அதிகமான பாடுகள், வேதனைகள் துன்பங்கள் உபத்திரவங்கள், கஷ்டங்கள் பிரயாசங்கள், நெருக்கங்கள், முயற்சிகள் மூலமாக மட்டும்தான் உலகம் முழுவதற்கும் வெளிப்படுத்தப்படும். கர்த்தருடைய திருச் சரீரமாகிய சபைக்காக சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் தம்முடைய சரீரத்தில் கர்த்தரால்

கொடுக்கப்பட்ட காரியங்களை ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளார்கள். (*கலாத்தியர் 4 : 11, 19 ; கொலோசெயர் 1 : 24, 25, 29*).

**கிழக்கிலிருந்து எழுப்பப்படும் நீதிமானாகிய சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் (ஏசாயா 41 : 2) – இஸ்ரவேலிலுள்ள எருசலேமுக்குக் கிழக்கே இருக்கிற இந்திய தீபகற்பத்தில், தமிழ்நாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலவிளை என்ற இடத்திலிருந்து எழுப்பி இந்தியாவின் நம்முடைய மகிமைக்காக தலைமுறை தலைமுறையாக உலகத்தோற்றத்திற்கு முன்பே ஐயா அவர்கள் மூலமாக உலகில் நடக்கப் போகிறதான மறைக்கப்பட்டிருந்த இரகசியங்கள், மறைப்பொருட்கள், பெரிய அதிசயங்கள், ஆச்சரியமான கிரியைகள் பெரிய இரகசியமாகவும் மறைக்கப்பட்டும் வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்பொழுது நித்திய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைப்படி மறைபொருட்கள், இரகசியங்கள், பரிசுத்த வேதாகமம் மூலமாகவும், சுவிசேஷ பிரசங்கங்கள் மூலமாகவும் உலகம் முழுவதும் அறியத்தக்கதாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. உலகத்திலுள்ள அனைத்து ஜனங்களும் தேவனுடைய இந்த மறைபொருட்கள், இரகசியங்களை அறிந்து கொள்ளவும், விசுவாசிக்கவும் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. உலகம் முழுவதுக்கும், எல்லா இடங்களிலுமுள்ள ஜனங்களுக்கும் பரப்பப்பட்டு வருகிற சாது. C. செல்வராஜ் (அப்பா) அவர்களுடைய மிகப் பெரிய நம்பிக்கையினாலும், கிறிஸ்து இயேசு மரணத்தினின்று உயிரோடெழும்பியதினாலுண்டான ஜீவனுள்ள நம்பிக்கையினாலும் இவைகள் மிகவும் ஆச்சரியமான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எழுதப்பட்டுள்ளன.** (*ரோமர் 16 : 25, 26 ; I கொரிந்தியர் 2 : 6 - 16 ; எபேசியர் 3 : 5 ; கொலோசெயர் 1 : 26 - 28 ; ரோமர் 1 : 8 ; I*

*தெசலோனிக்கேயர் 1 : 8, யூதா 20 ; I பேதுரு 1 : 3*) கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

இந்த மேலே குறிப்பிட்ட அதிசயமான காரியம் "**காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின்படி "(*எபேசியர் 1 : 9*) "தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்.**" (*எபேசியர் 1 : 11, 12*) தேவனுக்கே மகிமை!

இந்த இருபதாம் நூற்றாண்டில் சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்கள் உயிரோடிருக்கும் போதே கர்த்தராகிய தேவனாகிய இயேசுகிறிஸ்து அமெரிக்கா, மும்பை (இந்தியா) மற்றும் உலகின் பல்வேறு இடங்களிலும் முன்மாரி பின்மாரி மழையின் மகிமையான கிரியைகளைக் குறித்து (*யோவேல் 2 : 23 ; சகரியா 10 : 1*) தீர்க்கதரிசனமாகப் பேசியுள்ளார். ஐயா அவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்த பின்பு 21 வது நூற்றாண்டிலும் கூட கர்த்தர் இந்தியாவிலும், உலகின் பல பகுதிகளிலும் முன்மாரி பின்மாரி மழையின் மகிமையான கிரியைகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார். **உலகிலும், இந்தியாவின் பல பாகங்களிலும் கர்த்தர் இந்த ஆவிக்குரிய மழைகள், இந்திய தீபகற்பத்தின் தென்கோடியிலிருந்து துவங்கும் என்று தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார். இந்திய தீபகற்பத்தின் தென்கோடி முனையில் உள்ள தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் உள்ளது. எனவே இந்தியாவிலுள்ள, தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கர்த்தராகிய தேவனாகிய இயேசுகிறிஸ்துவின் முன்மாரி பின்மாரி ஆவிக்குரிய**

**மழைகளின் மகிமையான கிரியைகள் துவங்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மலவிளை என்ற இடம் உள்ளது. மலவிளையில் நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவருடைய சபையாகிய, முதற்நூற்றாண்டின் கிறிஸ்தவ சபையின் தொடர்ச்சியான ஆதி பெந்தெகொஸ்தே சத்திய சபையை, இந்தக் கடைசி நாட்களில் தமது மகிமையான ஆவிக்குரிய கிரியைகளுக்காக சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களால் ஸ்தாபித்திருக்கிறார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அல்லேலூயா!

**ஒருமுறை நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சாது. G. தேவநேசன் (ஐயா) அவர்களுக்கு முன்மாரி பின்மாரி மழை பொழிவதைக் குறித்து ஒரு தரிசனம் மூலமாக வெளிப்படுத்தினார். தேவனுடைய வசனம் அல்லது விதை தெரிவு செய்யப்பட்டு, ஆயத்தப்படுத்தப்பட்டு விதைப்பதற்கு ஆயத்தமாக உள்ளது. இருள், மந்தாரம், மேகங்கள், அடர்ந்த மேகங்கள், மின்னலுடன் கூடிய மேகங்கள் காணப்படுகின்றன; மழை பெய்வதற்காக இடி முழக்கங்களும், சத்தங்களும் கேட்கப் படுகின்றன. இது முதல் மழை பெய்ய வேண்டியது தான்.** (*யோவேல் 2 : 23; சகரியா 10 : 1*) தேவனுக்கே மகிமை!

உங்களனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக. நம்முடைய தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

-------------------